

# இயேசு,
# நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி

திருவருகை, கிறிஸ்து பிறப்புக் காலத்திற்கான

சிந்தனைக் கையேடு | இரண்டாம் ஆண்டு 2023 - 24

OFFICE FOR THE NEW EVANGELISATION

2013ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்ட புதிய நற்செய்தி முழக்கத்திற்கான அலுவலகம் (ONE) சிங்கப்பூரின் உரோமைக் கத்தோலிக்க உயர் மறைமாவட்டத்தில் உள்ள ஒரு நிறுவனமாகும். இது, ஒரு துடிப்பான, நற்செய்தியை முழங்கி, மறை பரப்பற்றும் திருஅவையாக நாமிருக்க வேண்டும் என்ற நமது உயர் மறைமாவட்டத்தின் தொலை நோக்கை நனவாக்கப் பணியாற்றுகிறது.

புதிய நற்செய்தி முழக்கத்திற்கான வினையூக்கியாக, திருமுழுக்குப் பெற்ற நமது கத்தோலிக்கர்களை மறைபரப்பும் சீடர்களாக மாற்றுவதற்கான செயல் முறைகளையும் முன் முயற்சிகளையும் எளிமைப் படுத்துவதே இந்த அலுவலகத்தின் பணியாகும்.

இந்த முயற்சி கத்தோலிக்க அறக்கட்டளையின் கீழ், GIFT திட்டத்தால் ஆதரிக்கப்படுகிறது.

enquiries.one@catholic.org.sg

# பொருளடக்கம்


திருவருகை, கிறிஸ்து பிறப்புக் காலச் செய்தி 5

இந்தக் கையேட்டின் நோக்கம் 6

இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை 6

குழு அமர்வின் வடிவம் 7

குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல் 8

திருவருகைக்கால ஞாயிறுகள் (இரண்டாம் ஆண்டு) 11

திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு 12

திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு 20

திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு 28

திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு 36

கிறிஸ்து பிறப்புக் கால ஞாயிறுகள் (இரண்டாம் ஆண்டு) 45

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா 46

மரியா, இறைவனின் தாய் பெருவிழா 54

ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா 62

பிற்சேர்க்கை – நடவடிக்கைகள் 72

நன்றியறிவிப்புகள் 83



ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்;
நான் தூய்மையாவேன். என்னைக் கழுவியருளும்;
உறைபனியிலும் வெண்மையாவேன்.

திருப்பாடல் 51:7

நாம் வெண்பனி போல் இருக்கிறோம்;
நாம் ஒவ்வொருவரும் கடவுளின் முன்
தனித்துவமும் சிறப்பும் பெற்றவர்.

# திருவருகை,
# கிறிஸ்து பிறப்புக் காலச் செய்தி

கிறிஸ்துவில் பிரியமான சகோதரர் சகோதரிகளே,

ஒரு தம்பதியர் தங்கள் முதல் குழந்தையை எதிர்பார்க்கும் போது, அவர்கள் முதல் முறையாகப் பெற்றோராக இருப்பதால் அதிகமான எதிர்பார்ப்பும் சில கவலைகளும் இருக்கும். உற்சாகம் அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களைச் சுற்றியுள்ள அனைத்து அன்புக்குரியவர்களுக்கும் இருக்கும். எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற விவாதங்கள் பல இருக்கும்.

ஆனால், அதே தம்பதியர் தங்களது பத்தாவது குழந்தையை எதிர்பார்ப்பதைச் சற்று கற்பனை செய்து பாருங்கள். அந்தக் காலத்தில் பத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுடன் பல குடும்பங்கள் இருந்தாலும், இந்நாள்களில் இது அரிதான ஒன்று. உங்களுக்கு அது பத்தாவது குழந்தையாக இருந்தால், அந்த அளவுக்கு எதிர்பார்ப்பும், பரபரப்பும், கவலையும் இருக்குமா? ஒரு வேளை இருக்கலாம். உங்களில் ஒரு சிலர் கடந்த உயிர்ப்புப் பெருவிழாவில் திருமுழுக்குப் பெற்றதால், தங்களது முதல் கிறிஸ்து பிறப்பு விழாவை சில கத்தோலிக்கர்கள் கொண்டாலாம். ஒரு சிலருக்கு இது ஐம்பதாவது கிறிஸ்து பிறப்பு விழாவாகவும் இருக்கும்.

பல ஆண்டுகளுக்குப் பின் அத்தகைய எதிர்பார்ப்பு ஏன் கலைந்தது, குறைந்தது? ஒவ்வொரு ஆண்டும் நாம் இதைத் தான் எதிர்பார்க்கிறோமா? எதிர்பார்ப்புகள் கலையும் போது தயாரிப்பு குறையத் தொடங்குகிறது. ஒரு செயல் முக்கியமானதாக இருக்கும் போது, அதற்குத் தயாரிக்க நாம் அதிக நேரத்தைச் செலவிடுகிறோம். ஏதோ ஒன்று சோர்ந்துவிட்டால், அது சாதாரணமாகவே கருதப்படுகிறது.

ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவையும் நாம் நமது முதல் நிகழ்வாகக் கொண்டாடுவதில் தான் நமது சவால் இருக்கிறது. அப்படி இருந்தால் தான் திருவருகைக் காலம் நல்ல எதிர்பார்ப்பு மிக்க ஒரு பேறுகாலக் காலமாக அமையும். இயேசுவை, நம் தந்தையின் அன்பின் திரு உருவமாகக் காண நம்மையே நாம் தயாரிப்போம்.

இயேசு வழியாக நம் தந்தையாகிய இறைவன் ஒரு வாக்குறுதியை அளித்து, அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். இயேசு நமக்காகக் காத்திருக்கிறார். அவர் மனுவுருவான வேளையில், மக்கள் ஒரு மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தாலும், பலர் அதற்குத் தயாராக இல்லாததால் அவரை முற்றிலும் தவற விட்டனர். நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதியின் சாட்சியாகிய இயேசு, நமது நம்பிக்கைக்கு உயிரளிக்கிறார்.

நீங்கள் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு நல்ல உள்ளுணர்வுடன் தயாரிக்க எனது நல்வாழ்த்துக்கள்.

*அருள்திரு. டெரென்ஸ் பெரெய்ரா*
புதிய நற்செய்தி முழக்கத்திற்கான முதன்மை குரு

# இந்தக் கையேட்டின் நோக்கம்

இந்தக் கையேடு குடும்பங்களுக்காகவும், பெரியோர் மறைகல்விக் குழுக்களுக்காகவும், பங்கு நிறுவனங்களுக்காகவும், அன்பியச் சமூகங்களுக்காகவும் உத்தேசிக்கப்பட்டது. இதைத் தனி மனிதச் சிந்தனைகளுக்கும் பயன்படுத்தலாம்.

- நாம் வாழும் கிறிஸ்தவ சமூகத்தை, இறைவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் இடமாக மாற்றவும்,
- இதில் பங்கேற்போர், அண்டை வீட்டாருக்கும் தேவையுள்ளோருக்கும் உதவும் தங்களின் குறிக்கோளை அடையவும், சமூக அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும்,
- பங்கிலுள்ள நிறுவனங்களும் குழுக்களும் கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொண்டு, ஒன்று கூடி செபிக்கவும்,
- இதில் உள்ளச் சிந்தனைகள், செய்திகள், செயல்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் ஒருவரோடு ஒருவர் விசுவாசத்தைப் பகிர்ந்து, ஒப்புரவாக்கப்பட்டு, அன்பை மட்டுமே தகவல் பரிமாற்றத்தின் முக்கியச் செய்தியாக்கிக் குடும்பத்தினரிடையே உள்ள தொடர்பை அதிகரிக்கவும் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

# இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

திருப்பலியில் இறைவார்த்தையைப் பெறுவதற்கான முன்தயாரிப்பாக ஞாயிறு திருப்பலிக்கு முன்னரோ, அல்லது திருப்பலியில் நாம் கேட்ட இறைவார்த்தைகளை நம் வாழ்க்கையில் பின்பற்றும் வகையில் ஞாயிறு திருப்பலிக்குப் பின்னரோ இந்தக் கையேட்டைப் பயன்படுத்தலாம்.

குழு அமர்வின் போது இறைவார்த்தையைப் படிக்கவும், அமர்வை வழிநடத்தவும், கையாளவும் அமர்வின் உறுப்பினர்கள் தாராளமாக முன்வரலாம்.

ஒவ்வொரு அமர்வையும் சிறப்புடன் வழிநடத்த வெவ்வேறு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்கலாம். வேறொருவர் அமர்வில் நடைபெறும் செயல்களைக் குறிப்பெடுத்து, வர இயலாதவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒவ்வொரு அமர்வும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளவும். அடுத்த அமர்விற்கான இடமும், நாளும், நேரமும் தற்போதைய அமர்வில் அறிவிக்கப்பட வேண்டும்.

# குழு அமர்வின் வடிவம்

**தொடக்கச் செபம்**

எல்லோரும் ஒன்று சேர்ந்து தொடக்கச் செபத்தைச் சொல்லி, தொடக்கப் பாடலைப் பாடலாம். தியான உணர்வையும், இறைவார்த்தையைச் செவிமடுக்கத் தூண்டும் பாடல்களைப் பயன்படுத்தவும்.

**இறைவார்த்தை**

கொடுக்கப்பட்டுள்ள மூன்று இறைவார்த்தைப் பகுதிகளை இரு முறையாவது வாசித்து, சில மணித்துளிகள் மௌனமாக தியானிக்கவும். பின்னர், இந்தக் கையேட்டில் உள்ளவற்றைப் பயன்படுத்தி அமர்வின் முதல்வர் அப்பகுதிகளுக்கு விளக்கம் தர வேண்டும். அமர்வின் முதல்வர் முன்னதாகவே தகுந்த தயாரிப்புடன் இருத்தல் அவசியம்.

**தியானிப்போம்**

இந்த வார இறைவார்த்தைப் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ள, நமது சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் வாசித்தப் பின்னர் சிறிது நேரம் தியானிக்கவும்.

**சிந்திப்போம்**

வெவ்வேறு குழுக்களை நினைவில் கொண்டு இந்தப் பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு உகந்தப் பகுதியை எடுத்து வாசித்து, சிந்தித்துக் கருத்தளிக்கவும். பலரும் கருத்தளிக்க நேரம் ஒதுக்கவும். ஒரே நபர் பேசுவதைத் தவிர்க்கவும்.

**நம் வாழ்விற்காக**

இறைவார்த்தையின் அழைப்பை ஏற்றுக் குழுவாகவோ தனி நபராகவோ ஒரு திடமான செயலில் ஈடுபட உங்களுக்கான இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**நற்செயல் புரிவோம்**

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை வேறொரு நபருடன் பகிர்ந்து கொள்ள நீங்கள் செயல்பட உதவும் இப்பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**நிறைவு செபம்**

எல்லோரும் இணைந்து, நிறைவு செபத்தைச் சொல்லி இந்த அமர்வை நிறைவு செய்யவும். நம் சமூகத்துக்காகவும், பங்கேற்போருக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும் சிறப்பாகச் செபிக்கவும்.

**பிற்சேர்க்கை நடவடிக்கைகள்**

நம் ஆன்மீகப் பயணத்தை நம் கிறிஸ்துவ சகோதரர் சகோதரிகளுடன் மேம்படுத்தச் செயல்பாடுகளும், நடவடிக்கைகளும் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ளது.

# குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல்

*‘இரண்டு, மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன்.’*
***(மத்தேயு 18:20)***

கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து கவனமாய் இருங்கள். குழுவினரிடையேப் பேசும் போதும், செயல்படும் போதும், பணிவுடனும் மரியாதையுடனும் இருங்கள். உரைகளைத் தியானத்துடன் வாசியுங்கள். நற்செய்தி வாசகங்கள் மீது உங்களது சிறப்பானக் கவனத்தைச் செலுத்துங்கள்.

---

*‘எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல், அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன்.’*
***(யோவான் 17:21)***

அனைவரையும் உபசரியுங்கள். புதிய வருகையாளர் மீது சிறப்புக் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொரு நபரையும் சமூகத்தின் அன்பிற்குரிய அங்கங்களாக நடத்துங்கள். அமர்வில் அனைவரும் பங்கேற்கும்படி ஊக்குவியுங்கள். அனைவருக்கும் புரியும்படியான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

---

*‘அவர்களுள் பெரியோர் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துகின்றனர். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது.’*
***(மாற்கு 10:42-43)***

எப்போதும் யாரிடமும் அதிகாரத் தோரணையுடனும், அகந்தையுடனும், பிறருக்கு அறிவுரை கூறும் வகையிலும், எல்லாவற்றையும் அறிந்த மாதிரியோ அல்லது என்ன செய்ய வேண்டுமென்று பிறருக்கு எடுத்துக் கூறும் வகையிலும், எந்த நபரும் நடந்து கொள்ளாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

---

*‘என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.’*
***(லூக்கா 9:23)***

இந்தச் சிந்தனைகளுக்கு மிகவும் அடிப்படையானது இறை வார்த்தை, திரு அவையின் போதனைகள் மற்றும் கிறிஸ்துவை நோக்கி நம்மை மனமாறச் செய்யும் அழைப்பு. இந்த அமர்வில், உங்கள் பகிர்வு வேறு கருத்து நோக்கித் திசை மாறிச் சென்றால், அன்றைய கருத்துக்கு ஆதரவு தரும்படி அவர்களை அழைக்க வேண்டும்.

---

*‘ஏனெனில் நீங்கள் பேச வேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்கு கற்றுத் தருவார்.’*
***(லூக்கா 12:12)***

பகிர வேண்டியதை முன் கூட்டியே தயாரிக்கவோ, இதற்காக ஒருவரை நியமிக்கவோ தேவையில்லை. இறைவனின் ஆவி இயல்பான இரக்கம் மிகுந்த குணத்துடன் செயல்படுவதற்காகக் காத்திருக்கவும். இக்கருத்து தொடர்பாக யாராவது தன்னிச்சையாகத் தங்களுடைய விசுவாச அனுபவத்தைப் பகிர வந்தால், அவருக்கு வாய்ப்பளித்து நன்றி கூறுங்கள்.

---

*‘உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்போது உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றி புகழ்வார்கள்.’*
*(மத்தேயு 5:16)*

இந்தச் சிந்தனைகள் இறைவனின் திருவுளத்தைச் செயல்படுத்தச் சவால் விடுகின்றன. அதாவது, நாம் சந்திக்கும் நபர்களிடம் இயேசுவின் அன்பைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. இதற்காக அடுத்த குழு அமர்வில் சிறிது நேரம் செலவழித்து, இதையே சென்ற வாரத்தில் நாம் எவ்வாறு சிந்தித்தோம் என்பதைப் பற்றி ஆராயவும்.

**சிங்கை கத்தோலிக்க வானொலி**
2023 - 2024 திருவருகை, கிறிஸ்து பிறப்புக் காலச் சிந்தனைகள்
கையேட்டின் ஒலி வடிவை உங்களுக்கு வழங்குகின்றனர்.

**வரும் 2023 நவம்பர் 30ம் தேதி முதல்,**
ஆங்கிலத்தில், எங்களது படைப்பாளர்கள் தொகுத்து வழங்குவதை
சிங்கை கத்தோலிக்க வானொலிச் செயலி வழியாக,
**ஒவ்வொரு வியாழன், காலை 8 மணிக்குக்**
கேட்டுப் பயன் பெறுங்கள்.

மேலும், எங்களது இணைப் பக்கம் (https://radio.catholic.sg)
வழியாகவும், சிங்கை கத்தோலிக்க வானொலிச் செயலியைப்
பதிவிறக்கம் செய்தும் கேட்டு மகிழலாம்.

Apple App Store

Google Play Store

Huawei App Gallery

## Podcast Versions

இதே சிந்தனைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் podcasts
வழியாகவும், கேட்டு மகிழுங்கள்.



# இயேசு,
# நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி

திருவருகைக் காலச் சிந்தனைகள்

# இயேசு,
## நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி

### திருவருகைக்கால ஞாயிறுகள் | இரண்டாம் ஆண்டு

| வாரம் | வாசகங்கள் | கருப்பொருள் |
|---|---|---|
| திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு | எசாயா 63:16-17; 64:1, 3-8<br>1 கொரிந்தியர் 1:3-9<br>மாற்கு 13:33-37 | இயேசு, நம் தந்தையின் பொறுமைக்கு சாட்சி |
| திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு | எசாயா 40:1-5, 9-11<br>2 பேதுரு 3:8-14<br>மாற்கு 1:1-8 | இயேசு, நம் தந்தையின் வழிக்கு சாட்சி |
| திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு | எசாயா 61:1-2, 10-11<br>1 தெசலோனிக்கர் 5:16-24<br>யோவான் 1:6-8, 19-28 | இயேசு, நம் தந்தையின் மறைபொருளுக்கு சாட்சி |
| திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு | 2 சாமுவேல் 7:1-5, 8-12, 14, 16<br>உரோமையர் 16:25-27<br>லூக்கா 1:26-38 | இயேசு, நம் தந்தையின் மாட்சிக்கு சாட்சி |

# இயேசு,
# நம் தந்தையின் பொறுமைக்கு சாட்சி



## தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே,

இத்திருவருகைக்காலத்தின் தொடக்கத்தில்
நீர் எங்கள் மீது பொறுமையுடன் இருக்கிறீர்,
உமது பொறுமையே எங்களை மனந்திரும்ப
அழைக்கிறது. இத்திருவருகைக்காலத்தில்
நீர் எங்கள் மீது கொண்டப் பொறுமையில்
நாங்கள் வாழ்ந்து, நாளுக்கு நாள்
பலவற்றை எற்று, வாழ்வில் வரும்
அனைத்து சின்னஞ்சிறியவற்றையும்
பாராட்டக் கற்றுக் கொள்வோமாக.
இவ்வாழ்வில் எங்களிடம் உள்ள அனைத்தும்
உம்மிடமிருந்து வந்தவை. நிலைவாழ்வுக்கு
எங்களை வழிநடத்தும் இயேசுவைப் பின்தொடர
உம் மீது நாங்கள் கொண்டுள்ள நிபந்தனையற்ற
நம்பிக்கையை மட்டுமே அதற்கு பதிலாக
நீர் எங்களிடம் எதிர்பார்க்கிறீர்.

ஆமென்.

# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### எசாயா 63:16-17; 64:1, 3-8

நம் தந்தையாகிய இறைவன் செவிகொடுத்துப் பதிலளிப்பார் என்ற எதிர்நோக்கில் எசாயா பாழாக்கும் உணர்வுகளுக்குள் மக்களை வழிநடத்தினார். இஸ்ரயேலர்கள் ஒருகாலத்தில் எகிப்தில் கொடிய அடிமைத்தனத்தை அனுபவித்த போது ஏங்கியது போலவே, இப்போதும் நம் தந்தையாகிய இறைவனின் தலையீட்டுக்காக ஏங்கினர். இப்போதோ, அவர்கள் தங்கள் பாவங்களால் அடிமைப்படுத்தப்பட்டு உதவியற்றவர்களாக இருக்கிறார்கள் என்று மக்களின் வலுவின்மையை இறைவாக்கினர் வலியுறுத்துகிறார். கடவுளின்றி அவர்கள் ஒன்றுமில்லை. அவர்கள் உயிரோடிருக்கக் கடவுள் மட்டுமே காரணம். ஆனால், அவர் அவர்களைக் கைவிட்டதாகத் தெரிகிறது. கடவுள் இல்லாதது அவர்களின் பாவம், அவரது கோபத்தின் அறிகுறி என்று புலம்புகிறார்கள். தங்கள் பாவத்தைப் பற்றிய விழிப்புணர்வில், அவர்கள் முறியடித்த உடன்படிக்கையின் உறவுக்குத் திரும்ப ஏங்கினார்கள்.

## இரண்டாம் வாசகம்:

### 1 கொரிந்தியர் 1:3-9

கொரிந்து திருஅவையிலுள்ள வேற்றுமை, செழுமையையும் சவால்களையும் உருவாக்கியது. கொரிந்து திருஅவை வெவ்வேறு வாழ்க்கை முறை, மதிப்புகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட பல்வேறு மக்கள் குழுவைக் கொண்டது. எனவே, தூய பவுல் கொரிந்து நகரிலுள்ள சமூகத்தை சீடத்துவத்தில் நிலைத்திருந்து, வேற்றுமையில் ஒற்றுமையாக இருக்க அழைப்பு விடுக்கிறார். ஏனெனில் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் நட்புறவில் பங்கு பெற அழைக்கப்பட்டுள்ளனர். எனவே, ‘ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்காகக் காத்திருக்கும் அவர்களுக்கு அருள்கொடை எதிலும் குறையே இல்லை’ என்று மனமாறிய கொரிந்தியர்களுக்கு அவர் நன்றி கூறுகிறார். அவர்கள் பெற்ற ஆவிக்குரிய வரங்கள் அவர்களின் தனிப்பட்டத் திருப்திக்காக மட்டுமல்ல, திருஅவையின் வளர்ச்சிக்காகவும், தூய ஆவியாரை அவர்கள் அனுபவிப்பதற்காகவும் என அவர்களுக்கு நினைவூட்டுகிறார். தூய ஆவியாரின் இந்த அனுபவங்கள், ‘நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளுக்காகக்’ காத்திருப்பதற்கும், குற்றமற்றவர்களாக இருப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும்.

## நற்செய்தி வாசகம்:
## மாற்கு 13:33-37

இந்தப் பகுதியில், ஆலயத்தின் அழிவு பற்றி இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் இயேசு முன்னறிவித்தது தொடர்பாக இயேசுவின் சீடர்கள் அவரை வினவுகின்றனர். சீடர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் பற்றி இயேசு பல எச்சரிக்கைகளுடன் பதிலளிக்கிறார். இந்தக் குறுகிய பகுதியில், கிட்டத்தட்ட ஒவ்வொரு வாக்கியமும் கவனத்துடன் இருக்க ஒரு எச்சரிக்கை விடுக்கிறது. சமூக, அரசியல் முரண்பாடுகளின் காலக்கட்டத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கே மாற்கு இதை எழுதுகிறார். இயேசுவின் சீடர்களாக அவர்கள் பலத் துன்புறுத்தல்களை எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கலாம். தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் இயேசுவின் எச்சரிக்கையால் துணிவு பெற்று, விழிப்போடும் கவனத்தோடும் இருந்து, இயேசுவின் பாடுகளில் பங்கேற்று, விடாமுயற்சியுடன் துன்பங்களைத் தாங்கிக்கொண்டனர்.

---

# தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

திருவருகைக்காலத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், இது நம் மீட்பருக்காகத் தயாராக வேண்டியதன் அவசியத்தைப் பற்றி நம்மைச் சிந்திக்க அழைக்கும் ஒரு தவம் நிறைந்தக் காலம். யாரிடமிருந்து அல்லது எதிலிருந்து நாம் மீட்கப்பட வேண்டும்? இயேசுவின் வருகை எவ்வாறு நம் தந்தையாகிய இறைவன் நம்மை மீட்பதில் பொறுமையாக இருந்தார் என்பதற்கு அடையாளம்? கடவுளிடமிருந்து பிரிக்கப்படும்போது நாம் உணரும் இழப்பையும், வலியையும் உதவியற்ற உணர்வையும் எசாயா 63 சித்தரிக்கிறது. எருசலேம் தேவாலயம் ஒரு சந்தையாக மாற்றப்பட்ட போது இயேசு கோபமடைந்ததைப் போலவே (மாற்கு 11:15–17), சிலவற்றைச் சரிசெய்வதில் நம் தந்தையாகிய இறைவன் காட்டும் ஆர்வமே 'அவரது கோபம்'. நமது மீறல்களை நாம் அடையாளம் காணும் போது, அவரது 'கோபத்தை' அவருடனான நமது உறவை மீட்டெடுப்பதற்கான அவருடைய விருப்பமாக நாம் அனுபவிப்பது உண்மையிலேயே இறைவனின் இரக்கமாகும். இஸ்ரயேலரைப் போல நாம் நம் புலன்களின் உணர்விழந்து, இதயத்தைக் கடினப்படுத்தும் போது, 'நான் நன்றாக இருக்கிறேன், நாங்கள் நலமாக இருக்கிறோம், எங்களுக்கு மீட்பு தேவையில்லை' என்று தனி வழியில் செல்ல நினைக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவருடனான உறவின் முழுமைக்குள் நுழைவதற்காக நாம் காத்திருக்கும்போது, நம் தந்தையாகிய இறைவன் நம் மீது எவ்வளவு பொறுமையாக இருக்கிறார் என்பதைக் கண்டறிவோம். அவரது பிள்ளைகளாக நம்மை உருமாற்ற வேண்டும் என்ற விருப்பத்தை நம்மில் வெளிப்படுத்த விரும்புகிறார். இல்லை எனில், இஸ்ரயேலரைப் போல நாமும் எதிர்நோக்கற்று, கடவுளிடமிருந்து பிரிக்கப்படுவோம். இவ்வுலகம் வழங்கும் இலக்குகளாலும் வெற்றிகளாலும் வடிவமைக்கப்பட்ட நமது சொந்தத் திட்டங்களையும், சொந்தச் சிலை வடிவங்களையும் நாம் நமக்கென உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

இயேசு நம்மில் வந்து தம் தந்தையிடம் செல்வதற்கான வழியை நமக்குக் காட்டுகிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் நாம் தூய ஆவியாருடன் ஒத்துழைத்து, களிமண்ணைப் போல் இணங்கி, நம் தந்தையாகிய இறைவனால் உருவாக்கப்பட வேண்டும்.

இது நம் சொந்த முயற்சியால் நம்மை இணைத்துக் கொள்ள முடியாது. 'என் அருள் உனக்குப் போதும். வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்' (2 கொரி 12:9) என்று தூய பவுல் சுட்டிக் காட்டுவது போல், நமது உதவியற்றத் தன்மையை உணர்ந்து, இறைவனின் வல்லமையை நம்முள் அனுமதிக்க வேண்டும். இரண்டாம் வாசகத்தில், இயேசு தம் இறப்பையும் உயிர்ப்பையும் வெளிப்படுத்தி, நமது அன்றாட வாழ்வில் நாம் எழுச்சி பெற ஆற்றலை வழங்குகிறார். நமது அன்றாடப் பணிகளும் பொறுப்புகளும் கடவுளால் நம் இதயங்களை வடிவமைக்க உதவும் வழிமுறையாகக் கருதி, விழிப்போடிருக்கும் பணியாளர்களா நாம்? நாம் காத்திருக்கும் வேளையில், பிறருக்குப் பணியாற்றுவதில் மகிழவும், நன்றி செலுத்தவும், நம்மையே அர்ப்பணிக்கவும், தூயு பவுலின் அறிவுரைக்கு செவிசாய்த்து நம் தந்தையின் ஏக்கத்துக்கு பதிலளிக்கிறோம். 'அகமகிழுங்கள், களிகூருங்கள்! இஸ்ரயேலே, இம்மானுவேல் உம்மிடம் வருவார்' என்பதற்கு ஏற்ப நம் தந்தை நமக்கு இயேசுவைத் தந்து, நமது ஏக்கத்தை நிறைவேற்றினார். நமது சொந்த உணர்தலையும், அவருக்கான நமது சொந்த ஏக்கத்தையும் எதிர்பார்த்து நம் தந்தை எவ்வளவு இரக்கத்துடன் காத்திருக்கிறார்!

நம் வாழ்வைச் சீரமைக்க நம் தந்தை உதவ வேண்டுமென்றால், அவர் நம்மிடையே தோன்ற வேண்டும். இதனால், நமது வாழ்வு எதை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதையும், நம் தந்தையாகிய இறைவனுடனும், நம்மைச் சுற்றியுள்ள அனைவரோடும் நம் உறவை எவ்வாறு மீட்டெடுக்க வேண்டும் என்பதையும் நாம் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். நாம் சொந்தமாகச் செய்ய வேண்டியது மிகக் குறைவாக இருப்பதால், நமக்கு நம் தந்தை தேவை. 'நீரே எங்கள் தந்தை, நாங்கள் களிமண், நீர் எங்கள் குயவன், நாங்கள் அனைவரும் உம் கைவேலைப்பாடுகளே. எங்களை வனையும், எங்களை உருமாற்றும், எங்களைக் குணப்படுத்தும்' என்பதே திருவருகைக்காலத்தின் கூக்குரலாக வேண்டும். இதற்கானப் பதில் பெத்லகேமின் தொழுவத்தில் கிடைக்கும்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- நீங்கள் ஒருவருக்காகக் காத்திருந்த நேரத்தை நினைவு கூருங்கள். உங்களுக்கு அந்த அனுபவம் எப்படி இருந்தது?
- நம் தந்தையின் பதிலுக்காகக் காத்திருந்த நேரத்தை நினைவு கூருங்கள். அந்த அனுபவம் உங்களுக்கு எப்படி இருந்தது?
- நம் தந்தையோடு இன்னும் இணக்கமாகி, அவருடையப் பொறுமைக்கு நான் சாட்சியாக மாற நான் என்ன செய்ய வேண்டும்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- உங்கள் சமூக உறுப்பினர் ஒருவருக்கு நீங்கள் பொறுமை காட்ட வேண்டிய நேரத்தை நினைவு கூருங்கள். இது உங்களுக்கு நம் தந்தை காட்டியப் பொறுமை போன்றதா?
- மற்றவர்களுக்கானப் பொறுமைக்கு உங்கள் சமூகம் ஒரு நல்ல சாட்சியா?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் தந்தையாகிய இறைவன் தனது பொறுமையைக் காட்டிய மற்ற விவிலியப் பகுதிகளை நினைவு கூருங்கள்.
- நீங்கள் பிறருக்கு இயேசுவாக இருக்க உங்கள் பணிக்குழு நம் தந்தையாகிய இறைவன் அவர்களுக்கு அளித்த அருங்கொடையை எவ்வாறு பயன்படுத்தியது?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- உங்கள் குடும்பத்தில் நீங்கள் பொறுமை காட்டிய நேரத்தை நினைவு கூருங்கள்.
- நம் தந்தையாகிய இறைவனைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டவர்கள் முன் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு அவருடையப் பொறுமைக்கு சாட்சியாக இருக்கிறார்கள்?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நாம் நம் தந்தையாகிய இறைவனிடம் திரும்ப, இயேசுவைத் தனது சாட்சியாகக் காணும்படி அவர் நமக்காகக் காத்திருக்கிறார். இயேசு, தான் வரவிருக்கும் நேரத்தைத் தாமதிக்கவில்லை. மாறாக, நாம் மனம் மாறப் பல வாய்ப்புகளை நமக்குத் தருகிறார்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

தனது நம்பிக்கையில் தடுமாறும் ஒருவர் மீது கவனம் செலுத்துங்கள். அவருடன் பகிரத் தேவையான இறைவார்த்தையால் உங்களை ஊக்குவிக்கத் தூய ஆவியாரிடம் மன்றாடுங்கள். பின்னர் அந்த நபரை மென்மையோடும் பொறுமையோடும் அணுகுங்கள்.



## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே,

பிரச்சனைகள் ஏற்படுத்திய மக்களிடம் நீர் பொறுமையாக இருந்ததற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தளராத உமது நிபந்தனையற்ற அன்புக்கும், எங்களுக்கு சிறந்ததையே விரும்புவதற்கும் உமக்கு நன்றி. நாங்கள் பாவம் செய்த போதிலும், உம் மீது விசுவாசத்தோடு நம்பிக்கை கொண்ட அனைவருக்காக உமது வாக்குறுதியை நிறைவேற்றியதற்காகவும் உமக்கு நன்றி.

ஆமென்.

**இயேசு,**
**நம் தந்தையின்**
**பொறுமைக்கு சாட்சி**

# என் திருவருகைக் காலச் சிந்தனைக் குறிப்புகள்

# இயேசு,
## நம் தந்தையின் வழிக்கு சாட்சி

### தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே,

திருவருகைக்காலத்தின் இரண்டாம் வாரத்தில் நாங்கள் உமது பிள்ளைகளாகக் கூடி வந்து, உமது அன்பின் கொடையாகிய உமது அன்புத் திரு மகன் இயேசு கிறிஸ்துவின் பிறப்பால் வெளிப்பட்ட உமது அன்பைப் பற்றி சிந்திக்கவிருக்கிறோம். இயேசுவால் எடுத்துக்காட்டப்பட்ட உமது வழிகளைத் தழுவ நாங்கள் எங்கள் இதயங்களைத் தயாரிக்க, உமது வார்த்தை எங்களுக்கு அறிவொளி ஊட்டுவதாக. இன்றைய வாசகங்கள், இன்றைய உலகில் நாங்கள் எவ்வாறு உமக்கு சாட்சிகளாக வாழ முடியும் என்பதைத் தெளிவுபடுத்துவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### எசாயா 40:1-5; 9-11

பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கினரின் இந்தப் பகுதி எழுதப்பட்டது. மக்களின் பாழடைந்த நிலையை நன்கு அறிந்த நம் தந்தையாகிய இறைவன் அனைவரையும் சென்றடையும் வழிகளில் நற்செய்தியை வழங்குமாறு இறைவாக்கினர் எசாயாவை ஊக்குவித்து, அவர்களுடைய சோதனைக் காலம் முடிந்து விட்டதையும், அவர் அவர்களோடு இருக்க வருவதை எதிர்நோக்குவதையும் அவருக்கு உணர்த்தினார். ஆயினும், அது நிறைவேற, சமூகம் முதலில் அவரது வருகைக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். கடவுள் தாமே அவர்களின் வாழ்வை அமைதிக்கும் ஓய்வுக்கு மாற்றுவார்.

## இரண்டாம் வாசகம்:

### 2 பேதுரு 3:8-14

யூதரல்லாத பிற இனக் கிறிஸ்தவர்களுக்குத் தூய பேதுரு இந்தத் திருமுகத்தை எழுதுகிறார். அவர்கள் தவறான போதனைகளால் தவறாக வழிநடத்தப்பட்டு, இறுதித் தீர்ப்பின் முடிவில் இயேசுவின் இரண்டாவது வருகையில் அவர்கள் தவறாகக் கவனம் செலுத்தினர். நீண்ட காத்திருப்பினால் நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதி நிறைவேற்றப்படுமா என்றக் கேள்வியை மக்கள் எழுப்பினர். அதற்கு மறுமொழியாகத் தூய பேதுரு, அந்த நேரத்தைப் பற்றியக் கடவுளின் கண்ணோட்டம் நம்மிடமிருந்து வேறுபட்டது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். மிக முக்கியமாக, தங்களது பாவங்களுக்காக அவர்கள் மனந்திரும்பி, 'தூய, இறைப்பற்றுள்ள நடத்தையில் மிகவும் சிறந்து வாழ்ந்து' தங்களைத் தயார்படுத்திக்கொள்ள இந்தக் காலக் கட்டத்தை அந்தச் சமூகம் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

## நற்செய்தி வாசகம்:
## மாற்கு 1:1-8

நற்செய்தியாளர் தான் எழுதும் நபரின் பெயரைக் குறிப்பிடுவதிலும் அடையாளப்படுத்துவதிலும் சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தார். பழைய ஏற்பாட்டைச் சுட்டிக் காட்டி, இறைவாக்கினர் எசாயாவால் குறிப்பிடப்பட்ட இயேசுவின் முன்னோடியாகத் திருமுழுக்கு யோவானைத் தூய மாற்கு அடையாளம் காட்டினார். யூதர்கள் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட மெசியாவைப் பெற அவர்கள் தங்களைத் தயார்படுத்தி, தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும் என்ற யோவானின் பறைசாற்றலுக்குச் செவிசாய்த்தனர்.

'மெசியா, இறை மகன்', 'ஆண்டவர்', 'தூய ஆவியாரால் திருமுழுக்குக் கொடுப்பவர்' என்ற தன் முன்னோர்களின் இறைவாக்குகளை யோவான் நிறைவேற்றினார். ஒரு எளிய வாழ்வு வாழ்ந்து, எல்லாரையும் விட உயர்ந்தவரும், மக்களைத் தூய்மைப்படுத்தவும் உருமாற்றவும் மிகவும் வல்லமைமிக்கக் கொடையைக் கொண்டுள்ள இறை மகனை வரவேற்க இயேசுவின் முன்னோடியாக யோவான் வாழ்ந்தார்.



# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

1980களில், நாம் வாழும் உலகத்தை விவரிக்க VUCA என்ற (கொந்தளிப்பான, நிச்சயமற்ற, சிக்கலான, தெளிவற்ற) சுருக்கத்தை உருவாக்கியப் பெருமை அமெரிக்க இராணுவத்திற்கு உண்டு. இராணுவத் தலைவர்கள் தாங்கள் இருந்தச் சூழலைப் புரிந்து கொள்ள உதவுவதே இதன் நோக்கமாக இருந்தது. 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அவர்களின் இந்த உத்தியானது, திட்டங்களைச் செயல்படுத்தப் பல நிறுவனங்களால் இன்னும் பயன்படுத்தப்படுகிறது.

இயேசு பிறந்த நிலப்பரப்பு, அதற்கேற்றச் சொந்தச் சவால்களால் நிறைந்திருந்தது. ஒரு தனிமனிதனாக மட்டுமல்லாமல், ஆசிரியராகவும், முதலாளியாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக, இறைவனின் திருமகனாகவும் அவர் இவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உலகத்தின் நிலையைப் பார்க்க அவருக்கு வேதனையாக இருந்திருக்க வேண்டும், குறிப்பாக தொடக்கத்தில் குழப்பத்திலிருந்து உலகை ஒழுங்காக உருவாக்குவதில் அவரது பங்கும் இருந்தது. இந்தத் துல்லியமான இந்த அடையாளமே கிறிஸ்துவைச் சரியானக் கொடையாக மாற்றியது. அவருடைய பிரசன்னம் யூதர்களுக்கு ஆறுதலளித்தது மட்டுமல்லாமல், நம் தந்தையாகிய இறைவனின் வழிகளும் நேரங்களும் வழக்கமான எதிர்பார்ப்புகளை மீறி, அவர்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வழிநடத்துவதை அவர்களுக்குக் காட்டியது. மாட்டுத் தொழுவத்திலிருந்தக் கடவுளின் பிரசன்னத்திற்கு முதல் சாட்சிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடையர்கள் மற்றும் ஞானிகளின் அனுபவங்களைப் போலவே, தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் நற்செய்தியை இயேசு பிரதிநிதித்துவப் படுத்தினார். இதனால் அவர்கள் பிறருக்கு கிறிஸ்துவை அறிவித்துப் புது வாழ்வு பெற்றனர்.

இன்று, இயேசு அனைத்து மனித குலத்திற்கும் மொத்தமாக வழங்கப்பட்டு, தற்போதையக் குழப்பத்திற்கு ஒரு தீர்வாக மாறியுள்ளார். தூய ஆவியார் வழியாக, நம் தந்தையாகிய இறைவனோடும், நம்மைச் சுற்றியுள்ளவர்களோடும், இயற்கையோடும் நாம் கொண்டுள்ள உறவின் புனிதத்தை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதை அவர் நமக்குக் கற்றுத் தருகிறார். இல்லையெனில், நம்மைச் சுற்றியுள்ளச் சூழ்நிலைகளுக்கு நாம் எதிராக மாறி, அதையே இன்னும் மீண்டும் அதிகமாகச் செய்வதால், இது நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வரத் தவறிவிடும்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- 'என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல' (எசாயா 55:8). உங்களை விடக் கடவுளின் வழிமுறைகள் சிறப்பாக அமைந்த அனுபவத்தை நினைவு கூர்ந்து, அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- கடவுளை நோக்கிய உங்கள் பாதையின் தற்போதைய நிலையை எவ்வாறுள்ளது?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் தந்தைக்கு இயேசுவே 'வழி' என்பதை சமூகத்திற்கு அன்பியம் எவ்வாறு அறிவிக்கிறது?
- திருமுழுக்கு யோவான் வழியைச் சுட்டிக்காட்டுவதில் உறுதியாக இருந்தார். நம் தந்தைக்கு இயேசுவே 'வழி' என்பதைச் சுட்டிக்காட்டுவதில் உங்கள் அன்பியத்தின் உறுதியும் நிலைப்பாடும் என்ன?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் ஆலயப் பணிக்குழுவில் இயேசுவின் 'வழி' என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்கிறோமா?
- நம் தந்தையிடம் நம்மை வழிநடத்த இயேசுவின் 'வழிக்கு' நம்மை மிகவும் நெருக்கமாக இணைத்துக் கொள்ள நம் ஆலயப் பணிக்குழுவில் எத்தகையப் புத்தாக்கத்தை நாம் அறிமுகப்படுத்தலாம்?

## குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நாம் ஒருவருக்கொருவர் எதை வழங்க முயற்சிக்கிறோம், இயேசுவின் நற்செய்தியையா (வழி) அல்லது கெட்ட செய்தியையா (புகார்கள்)?
- உங்கள் குடும்பம் இயேசுவின் 'வழியை' நினைவு கூர்ந்து, அதை அறிவித்து, வாழ்கிறதா?

# நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நம் தந்தையாகிய இறைவனை நோக்கிச் செல்வதற்கு, நம் வாழ்வைச் சரியாக வாழ்வதற்கான (அவசியம் இல்லை என்றாலும்) வழியை இயேசு நமக்குக் காட்டுகிறார்.

# நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

கடந்த வாரம் நீங்கள் தொடர்பு கொண்ட நபருக்கு எதிர்நோக்கையையும் மகிழ்ச்சியையும் அளிப்பதற்கான வழிகளைப் பற்றி சிந்தியுங்கள். அன்பியத்தில் சேர அவரை அழைக்கவும் அல்லது அவருடன், ஒரு சமூகமாகப் பயணம் செய்ய நீங்கள் முயற்சி எடுங்கள்.

# நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே,

உம் திரு மகனை உமது சாட்சியாக எங்களுக்கு அளித்து, எங்களைச் சுற்றி உள்ளக் குழப்பமானச் சூழ்நிலைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதை எங்களுக்குக் காண்பிப்பதன் வழியாக, எங்கள் உதவியற்றப் பாழடைந்த நிலையிலிருந்து எங்களை விடுவிக்க, உமது வாக்குறுதியை நிறைவேற்றியதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் எங்களுக்காக உத்தேசித்துள்ள மகிழ்ச்சியை அனுபவிக்க அவரது வார்த்தைகளும் செயல்களும் எப்போதும் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

**இயேசு,**
**நம் தந்தையின்**
**வழிக்கு சாட்சி**

# என் திருவருகைக் காலச் சிந்தனைக் குறிப்புகள்

# இயேசு,
# நம் தந்தையின் மறைபொருளுக்கு சாட்சி



## தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத்தில் இருக்கிற
எங்கள் தந்தையே,

உமது மறைபொருளைச் சிந்தித்துப் பார்க்க, திருவருகைக்காலத்தின் இந்த மூன்றாவது வாரத்தில் எங்களை ஒன்று கூட்டியதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்நிலையை நாங்கள் அடைந்து, இந்த வாரத்தின் மூன்று வாசகங்களைப் பற்றிச் சிந்திக்கும் போது, நீர் எங்களுக்கு வெளிப்படுத்த விரும்பும் உண்மைகள், உமது பிரசன்னத்தின் மறைபொருளை ஆழமாக்குவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்துப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### எசாயா 61:1-2; 10-11

ஒரு அனுகூலமான ஆண்டை அறிவிக்கவிருந்தக் கிறிஸ்துவின் வருகையைப் பற்றி எசாயா இறைவாக்குறைக்கிறார். அது என்ன அனுகூலமான ஆண்டு? எசாயா யூபிலி ஆண்டை (லேவி 25) இங்குக் குறிப்பிடுகிறார், இது ஒவ்வொரு 50 ஆண்டுகளுக்கு ஒரு முறை கைதிகள் விடுவிக்கப்பட்டு, கடனாளிகள் மன்னிக்கப்படும் இரக்கத்தின் காலம். இஸ்ரயேல் வேலை செய்வதிலிருந்து ஓய்வெடுக்க வேண்டும்.

நிலையான யூபிலியை அறிவிக்க இயேசு வருகிறார். பாவத்தின் கட்டுகளிலிருந்து நம்மை விடுவிக்க அவர் வந்திருக்கிறார். நாம் செய்த அத்துமீறல்களால் ஏற்படும் கடனிலிருந்து நம்மை விடுவிக்கிறார். அவருடையப் பாடுகளினால் இறைவனில் இளைப்பாறுதலைக் காணும் வழியை அவர் நமக்குத் திறந்திருக்கிறார். இவ்வாறு, ‘ஆண்டவரில் நாம் பெருமகிழ்ச்சி அடைவோம்.’

## இரண்டாம் வாசகம்:

### 1 தெசலோனிக்கர் 5:16-24

இயேசுவால் மீட்பு சாத்தியமானது என்றாலும், இந்த அருளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும். இந்த அற்புதமானக் கொடையைப் பயன்படுத்துவவோ புறக்கணிப்பதோ நமது விருப்பம். செம்மறியாடுகள், வெள்ளாடுகள் உவமையில் (மத் 25:31-46) இயேசு நமக்குக் கற்பிப்பது போல, நம் செயல்களாலும், நம் வாழ்வில் நாம் எவ்வளவு அன்பாக இருக்கிறோம் என்பதைப் பொருத்து நாம் தீர்ப்பிடப்படுவோம். எனவே, ‘நல்லதைப் பற்றிக் கொள்ளுங்கள். எல்லா வகையான தீமைகளையும் விட்டு விலகுங்கள்’ எனத் தூய பவுல் அறிவுறுத்துகிறார்.

செய்வதை விடச் சொல்வது எளிதள்ளவா? அதிர்ஷ்டவசமாக, இம்முயற்சியில் நாம் தனித்து இல்லை. நம் தந்தையாகிய இறைவன் நம் மீட்பை விரும்புகிறார் (1 தீமோ 2:4), நாம் நீதி நேர்மையுடன் வாழ உதவ, அவர் தம் அருளைத் தருவார். ‘உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவரே இதைச் செய்வார்.’

## நற்செய்தி வாசகம்: யோவான் 1:6-8; 19-28

திருமுழுக்கு யோவான் இயேசு என்ற ஒளியைப் பறைசாற்ற ஒரு சாட்சியாக விவரிக்கப்படுகிறார். திருமுழுக்கு யோவான் ஒரு பிரபலமான மறையுரையாளர், அவரைப் பலர் பின்பற்றினார்கள் என நற்செய்தியிலிருந்து நாம் அறிவோம். இருப்பினும், தனக்கென ஒரு பெயரை உருவாக்க நல்லதொரு வாய்ப்பு கிடைத்த போது, தன்னை 'அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூடத் தகுதியற்ற' ஒரு தாழ்ந்த அடிமையோடு தன்னை ஒப்பிட்டுத் தாழ்த்தி, இயேசுவை உயர்த்துகிறார். கடவுள் தனக்கு அளித்தத் தனித்துவமானப் பணியில் அவர் நிறைவோடு இருந்தாலும் அவர் எப்போதும் இயேசுவை மாட்சிமைப்படுத்த முயன்றார்.

திருமுழுக்கு யோவான் செய்தப் பணியை நம் வாழ்வில் நாம் தனித்துவமான வழிகளில் பின்பற்றவும், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் தங்கள் இதயங்களில் ஆண்டவருக்கு நேரான வழியை உருவாக்க உதவவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.



# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

இவ்வாரத்தின் கருப்பொருள் 'இயேசு, நம் தந்தையின் மறைபொருளுக்கு சாட்சி'. 'இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல்;' (கொலோ 1:15). 'என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்' என அவர் தனது திருத்தூதர்களிடம் கூறுகிறார் (யோவான் 14:9). மேலும் அவர் நம் தந்தையின் அன்பைப் பற்றிய மகத்தானப் பார்வையை நமக்குத் தருகிறார். சிலுவையில் அவர் செய்த தியாகத்தினால் 'தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை' என்பதை நாம் புரிந்து கொள்கிறோம் (யோவான் 15:13). 'இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' என்ற தமது வாக்குறுதியைக் காப்பாற்ற திவ்விய நற்கருணையிலும், அதைத் திருப்பலியில் பெறும் நம்மிலும் இயேசு எப்பொழுதும் இருப்பார் (மத் 28:20).

எனவே, நாம் அக்களிக்க வேண்டும்! திருவருகைக்காலத்தின் இந்த மூன்றாவது **கௌடெடே ஞாயிறு** என்று அழைக்கப்படுகிறது. அதாவது, இலத்தீன் மொழியில் 'அக்களிப்பின் ஞாயிறு' என்பது அதன் பொருள். இந்த ஞாயிறும், கிறிஸ்து பிறப்பு விழாவும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை நெருங்கி வருவதால், திருச்சபை நம்மை அக்களித்திருக்க ஊக்குவிக்கிறது. நம் தந்தையாகிய இறைவன் தம்மைத் தொலைவில் உள்ளக் கடவுளாகக் காட்ட விரும்பவில்லை. எனவே, அவர் தம் ஒரே பேறான மகனை நம்மிடம் நெருங்கி வரவும், பாவம் தவிர மற்ற எல்லா விதத்திலும் நம்மைப் போலவே வாழ நம்மிடம் அனுப்பினார் (எபி 4:15). இன்றைய வாசகங்கள், நாம் அக்களித்திருக்க அதிகக் காரணங்களைத் தருகின்றன. இயேசு நம்மை பாவத்திலிருந்து மீட்டார். எனவே, அவர் நம்மைக் கைவிடமாட்டார். நாம் எவ்வளவு பேறு பெற்றவர்கள்!

எனவே, பதிலுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நம் தந்தையாகிய இறைவனின் திட்டத்தில் அவருடைய தனித்துவமானப் பங்கைப் புரிந்து கொண்டு, அக்களிப்பானத் தாழ்ச்சியோடு, அதை நிறைவேற்றியத் திருமுழுக்கு யோவானைப் பின்பற்ற நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அதை நிறைவேற்றக் கடவுள் நமக்குக் கவர்ச்சியானக் கொடைகளை அளித்துள்ளார். இந்த திருவருகைக்காலத்தில், நம் தந்தையின் மறைபொருளை மற்றவர்களுக்குச் சாட்சியாக மாற்ற மனத்தாழ்ச்சி என்ற அருளுக்காக சிறப்பாக மன்றாடுவோம்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- இயேசு வழியாக மூவொரு இறைவனின் மறைபொருளை நாம் எந்த வழிகளில் மேலும் புரிந்து கொண்டோம்?
- இயேசுவே வழியும், உண்மையும், வாழ்வும் என்பதைப் பிறர் கண்டறிய நான் எந்த வழிகளில் உதவி இருக்கிறேன்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் தந்தை, மகன் இயேசு, தூய ஆவியாரின் மறைபொருள்களைப் பற்றிய நமது புரிதலை ஆழப்படுத்தும் இடமாக நமது சமூகம் உள்ளதா?
- இயேசு கிறிஸ்துவை பிறருக்குச் சுட்டிக் காட்டுவதில் திருமுழுக்கு யோவானின் பங்கை நம் சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளதா?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- திருமுழுக்கு யோவானின் பங்கை நமது ஆலயப் பணிக்குழுவினர் ஏற்றுக் கொண்டது நமது பணிக்கு நல்ல மகிழ்ச்சியைத் தந்திருக்கிறதா?
- இறை மக்களுக்கு நாம் செய்யும் பணியில் மனத்தாழ்ச்சியுடன் இருப்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் குடும்பத்திலுள்ளத் ‘திருமுழுக்கு யோவான்’ குறித்து நமது உணர்வுகள் என்ன? நம் குடும்பத்தினர் மனம் மாறச் செவிசாய்க்கிறார்களா?
- நம் குடும்பத்தினருடன் நாம் பணிவுடன் நடந்து கொள்கிறோமா? அவர்களை நாம் தந்தை, மகன் இயேசு, தூய ஆவியாரின் மறைபொருளுக்குள் நெருங்கச் செய்கிறோமா?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

இயேசு வழியாக நம் தந்தையாகிய இறைவன் நம் மீது கொண்டுள்ளத் தம் மகத்தான அன்பை வெளிப்படுத்தினார். எனவே, நாம் அக்களிப்போம்!

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

இரண்டு வாரங்களுக்கு முன் சந்தித்த அந்த நபரின் கொடைகளையும் தனித்துவத்தையும் அங்கீகரித்து, அவரை நமது சமூகத்தில் வரவேற்பதைத் தொடருங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத்தில் இருக்கிற
எங்கள் தந்தையே,

எங்கள் திருவருகைக்காலப் பயணத்தில் உமது வார்த்தையைச் சிந்திக்க அழைத்தமைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். மீட்புக்கான உமது திட்டம், இயேசு வழியாக உமது அன்பின் மறைபொருளை ஓரளவுக்குக் காண எங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மனத் தாழ்ச்சியோடு கீழ்ப்படிவதால் இந்த மறைபொருளைப் பற்றி மேலும் சில புரிதல்களைப் பெறுவோம் என்பதை நீர் எங்களுக்கு வெளிப்படுத்துகிறீர். திருமுழுக்கு யோவானைப் போலவே, நீர் எங்களிடம் ஒப்படைத்த இப்பணியை நாங்கள் நிறைவேற்றுவதால் நாங்கள் உமக்கு மாட்சியளிக்க விரும்புகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.



**இயேசு,**
**நம் தந்தையின்**
**மறைபொருளுக்கு சாட்சி**

# என் திருவருகைக் காலச் சிந்தனைக் குறிப்புகள்

# இயேசு,
## நம் தந்தையின் மாட்சிக்கு சாட்சி

### தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே,

திருவருகைக்காலத்தின் நான்காவது வாரத்தில்
உம் திருமகனின் பிறப்புக்காக நாங்கள்
தயாராகும் போது, உமது மாட்சி எங்கள்
வாழ்வில் பிரகாசித்த காலங்களை
நாங்கள் நினைவு கூருகிறோம்.
உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்து,
உமது அன்புக்கு சாட்சியாக இவ்வுலகிற்குத்
தன்னை மனமுவந்து கையளித்தார்.
அவரது வார்த்தையால் உமது பிரசன்னத்தின்
மாட்சியை நாங்கள் காண்கிறோம்.
‘நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே
எனக்கு நிகழட்டும்’ என்று அன்னை மரியா
உமது மீட்புத் திட்டத்திற்கு மனமுவந்து சமர்ப்பித்து,
எங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.
எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக
உமது திருப்பெயரை மாட்சிப் படுத்துகிறோம்.

ஆமென்.

# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### 2 சாமுவேல் 7:1-5; 8-12; 14, 16

கடவுளுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டும் நோக்கத்திற்காக, தாவீதின் வம்சத்தையே தம் மக்களுக்கு என்றென்றும் அரசர்களாக நிலைநிறுத்துவார் என்ற செய்தி தாவீது அரசருக்குக் கொடுக்கப்பட்டது மிகவும் ஆச்சரியத்துக்குரியது. முதலில் தாவீது ஒரு ஆயர் சிறுவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கடவுள் அவரை அரசராகத் திருப்பொழிவு செய்திருந்தாலும், அவருக்குப் பதிலாக வேறொருவரை இறைவன் தேர்ந்தெடுப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இறைவனுக்கான அவரது அர்ப்பணிப்பும், இறைவனுக்கு சொந்த ஆலயம் வேண்டும் என்ற அவரது விருப்பமும் இறைவனிடமிருந்து இத்தகையதொரு சாதகமான பதிலைத் தூண்டியது.

## இரண்டாம் வாசகம்:

### உரோமையர் 16:25-27

உரோமையருக்கு எழுதிய இத்திருமுகத்தில் தூய பவுல், இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பிற இனத்தாருக்குத் தொடர்ந்து பரப்ப வேண்டும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுகிறார். உரோமையில் உள்ளத் திருச்சபை தூய பவுல் செல்லக் கூடிய ஒன்று அல்ல, ஆனால் அவர் தன் திருமுகத்தைப் பயன்படுத்தி விசுவாசத்தின் ஆழமான விளக்கத்தை அவர்களுக்கு வழங்குகிறார். இப்பகுதி இத்திருமுகத்தின் இறுதி பகுதியாகும். மேலும் இது இத்திருமுகத்தைப் படிக்கும் சீடர்களுக்கு, 'இயேசுவுக்கு சாட்சியாக இருக்க வேண்டும், உயிர்த்தெழுந்த இறைவனை அறிவித்து மாட்சிப்படுத்த வேண்டும்' என்றப் பணியை தூய பவுல் அவர்களுக்கு வழங்குவதோடு முடிவடைகிறது.

## நற்செய்தி வாசகம்:
## லூக்கா 1:26-38

வானதூதர் கபிரியேலுக்கு அன்னை மரியா ‘சரி’ என்று கூறியது ஒரு தனிப்பட்ட ஒப்பந்தம் அல்ல. இது நம் அனைவருக்குமான ஒரு கூட்டு ஒப்பந்தம். பாம்புக்கு ‘சரி’ என்று கூறி பழத்தை உண்ணும் ஏவாளின் ஆதிகாலச் செயல் பாவத்திற்கு வழிவகுத்தது போல, அன்னை மரியாவின் செயல் தான் நம் மீட்பிற்கு வழி வகுக்கும். எனவே, அன்னை மரியாள் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சியாக இருப்பதால், இயேசுவைப் பெற்றெடுத்த அவர், இயேசுவின் வார்த்தையை நிறைவேற்ற நாம் பணியாற்றும் போது நாம் காணக் கூடிய ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.



# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

நாம் பின்பற்ற வேண்டிய மூன்று நபர்களின் கதைகள் இந்தத் திருவருகைக்காலத்தின் நான்காவது வாரத்தில் நமக்கு வழங்கப்படுகின்றன. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாவீது அரசர், நற்செய்தியை அறிவிக்க ஊர் ஊராகப் பயணம் செய்த பவுல், மற்றும் ஆண்டவரின் அடிமை எனத் தன்னையே அர்ப்பணித்த அன்னை மரியா.

இருந்தாலும், இந்த மூவரும் நம்மைப் போலவே வாழ்வில் மிகவும் போராடினார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தாவீது சவுல் அரசனால் துன்புறுத்தப்பட்டார், பிளவுபட்ட மக்களிடமிருந்து இஸ்ரயேலை அவர் தன் கட்டுப்பாட்டுக்குள் எடுக்க வேண்டியிருந்தது. ஆயினும், அவர் அரசை ஒன்றிணைத்தவுடன், அவர் எருசலேமை மீண்டும் கட்டியெழுப்பி, கடவுளின் பேழையை எருசலேம் நகருக்குள் கொண்டு வந்தார்

பவுல் மனம் மாறுவதற்கு முன்பு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார் மற்றும் டமாஸ்கஸ் நகருக்குச் செல்லும் வழியில் தாக்கப்பட்டு பார்வை இழந்தார். ஆண்டவர் அனனியாவை அவரிடம் அனுப்பும் வரை அவர் மூன்று நாட்கள் பார்வையற்றவராக வழிநடத்தப்பட்டார். பார்வை திரும்பியவுடன், அவர் திருமுழுக்குப் பெற்றார். அவரது மன மாற்றம் கிறிஸ்தவர்களிடையே ஒரு வித சந்தேகத்துடன் பார்க்கப்பட்டது, ஆனால், அவரது ஆர்வமும் ஊக்கமும் அவர் போதித்தவர்களை நம்ப வைத்தது, மேலும், அவர் நமது கத்தோலிக்க நம்பிக்கையின் பரவலுக்கு மிகப் பெரிய ஊக்கியாக இருந்தார்.

அன்னை மரியா ஒரு இளம் பெண், அவள் ஒரு குழப்பமானச் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டாள்: இறைவனிடம் 'சரி' என்று சொல்வது, அவள் இந்நாள் வரை பெற்ற நற்பெயரை விட அதிக ஆபத்து வாய்ந்தது. அக்காலத்தில் விபச்சாரத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நம் அன்னை மரியா, கடவுளின் மாட்சியைத் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல், சிலுவையில் அவர் இறக்கும் வரை அவருடன் நிற்க அவரால் முடிந்தது.

இந்த மூன்று நபர்களில் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்டப் போராட்டங்களிலிருந்து எழுந்து, தங்கள் சொந்த தனித்துவமான வழிகளில் தங்கள் நம்பிக்கையை நிலைநிறுத்துவதைத் தொடர முடிந்தது. அது போல், நம் தந்தைக்குச் சாட்சியாக இருப்பது நம் ஒவ்வொருவருக்கும் உரியது. நமது குறைபாடுகளுடன் நாம் அந்த உயரத்துக்குச் செல்ல முடியும். அடுத்த வாரம், நம் ஆண்டவரின் பிறப்பை நாம் நெருங்கும் வேளையில், இயேசுவுக்காக நம் இதயங்களில் இடம் ஒதுக்கி, நம் தந்தையின் அன்புக்கும் மாட்சிக்கும் சாட்சியாக இருப்பதற்கு நம்மையே நாம் தயார் செய்வோம்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- நம்பிக்கையா துன்புறுத்தலா என்ற சூழ்நிலைக்குள் நீங்கள் எப்போதாவது தள்ளப்பட்டதுண்டா? அதற்கு உங்கள் பதில் மொழி என்ன?
- உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு, உங்கள் நம்பிக்கைக்கு நீங்கள் எந்த வழிகளில் சாட்சியாக இருக்க முடியும்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உங்கள் சமூகத்தைப் பற்றி என்ன அபிப்ராயத்தைக் கொண்டுள்ளனர்? ஒரு சமூகமாக நீங்கள் செய்யும் செயல்கள் நம் தந்தையாகிய இறைவனின் மாட்சியை வெளிப்படுத்துகிறதா?
- தந்தை அழைக்கும் போது 'சரி' என்று சொல்லும்படி மற்றவர்களை ஊக்குவிக்க சமூகத்தில் போதுமான இடத்தை நீங்கள் வழங்குகிறீர்களா?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் தந்தையாகிய இறைவனின் மாட்சிக்கு சாட்சியாக இருக்க உங்கள் ஆலயப் பணிக்குழு எவ்வாறு தயாராகியுள்ளது?
- தூய பவுலைப் போலவே, அனைத்து நாடுகளையும் சீடர்களாக்கும் உங்கள் பணியை நிறைவேற்றி, உங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறீர்களா?

## குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் தந்தையாகிய இறைவனின் மாட்சி உங்கள் குடும்பத்தார் வழியாக உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதா?
- உங்கள் வீட்டில் நம் தந்தையாகிய இறைவனின் மாட்சியை அங்கீகரிக்க உங்கள் குடும்பம் எந்த வழிகளில் தயாராகலாம்?

# நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நம் தந்தையாகிய இறைவனின் மாட்சிக்கு நாம் அனைவரும் சாட்சிகளாக அழைக்கப்படத் தகுதியானவர்களே.

# நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

நீங்கள் பயணிக்கும் நபரைப் பற்றி சற்று சிந்தியுங்கள். அவருக்கு நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதியான அமைதி, மகிழ்ச்சி, மற்றும் அன்பைக் காட்ட உறுதியான சில வழிகளைப் பற்றிச் சிந்தியுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத்தில் இருக்கிற
எங்கள் தந்தையே,

இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடுவது உமது அற்புதமான அன்பின் இறுதி அடையாளமாகும். இந்தத் திருவருகைக் காலத்தில் எங்களோடு நீர் பயணம் செய்ததற்காக உமக்கு நன்றி. உமது மீட்பின் வாக்குறுதியை விட வேறெந்தப் பெரிய வாக்குறுதியும் நிறைவேற்றப்பட்டதில்லை. இயேசு வழியாக எங்கள் வாழ்வில் உமது மாட்சியை நாங்கள் தொடர்ந்து காண்கிறோம். எங்கள் சொல்லாலும் செயலாலும் உமது அன்பை அறிவிக்க எங்கள் கரங்களையும் நாவையும் ஆசீர்வதியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

**இயேசு,**
**நம் தந்தையின்**
**மாட்சிக்கு சாட்சி**

# என் திருவருகைக் காலச் சிந்தனைக் குறிப்புகள்


HIS NAME SHALL BE CALLED
WONDERFUL COUNSELOR
MIGHTY GOD
EVERLASTING FATHER
PRINCE OF PEACE
ISAIAH 9:6

# இயேசு, நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி

## கிறிஸ்து பிறப்புக் கால ஞாயிறுகள் | இரண்டாம் ஆண்டு

| வாரம் | வாசகங்கள் | கருப்பொருள் |
|---|---|---|
| கிறிஸ்து பிறப்புப் பெருவிழா | எசாயா 52:7-10<br>எபிரேயர் 1:1-6<br>யோவான் 1:1-18 | இயேசு, நம் தந்தையின் மீட்புக்கு சாட்சி |
| மரியா, இறைவனின் தாய் பெருவிழா | எண்ணிக்கை 6:22-27<br>கலாத்தியர் 4:4-7<br>லூக்கா 2:16-21 | இயேசு, நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி |
| ஆண்டவரின் திருக் காட்சிப் பெருவிழா | எசாயா 60:1-6<br>எபேசியர் 3:2-3, 5-6<br>மத்தேயு 2:1-12 | இயேசு, நம் தந்தையின் அறிவிப்புக்கு சாட்சி |

## தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

# இயேசு, நம் தந்தையின் மீட்புக்கு சாட்சி

விண்ணகத்தில் இருக்கிற
எங்கள் தந்தையே,

எங்கள் அன்புத் தந்தையே, உமக்கு சாட்சி அளிக்கும் உமது திருமகனாகிய இயேசுவின் மாட்சியானப் பிறப்பைக் கொண்டாடுகிறோம். இறை வார்த்தைகள் உமது அன்பை எல்லா இடத்திலும் எந்நேரத்திலும் பிரதிபலிக்கிறது. எங்கள் சொந்த வடிவமைப்புகளிலிருந்து எங்களை மீட்கவே உமது சொந்த மகனை அனுப்பினீர் என்பது உமது திருவுளத்தை வெளிப்படுத்துகிறது. எங்கள் மீட்பின் ஆதாரமான உம்மை நம்புவதும் விசுவசிப்பதுமே எங்கள் மீட்பு.

ஆமென்.



# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### எசாயா 52:7-10

இப்பகுதியின் மகிழ்ச்சித் தொனியைத் தவறவிடுவது மிகக் கடினம். ஏனெனில் வசனம் 9ல், எருசலேமின் இடிபாடுகளைக் குறிப்பிடும்போது இதைப் பற்றிய குறிப்பு ஒன்று கொடுக்கப் பட்டுள்ளது. பாபிலோன் எருசலேமை அழித்து, அதன் மக்கள் தொகையில் பெரும் பகுதியை பாபிலோனியாவின் மற்ற நகரங்களுக்கு நாடு கடத்தும் என்று பத்தாண்டுகளுக்கு முன்பு தான் இது எழுதப்பட்டது. எருசலேம் வெறிச்சோடி, வீணாகிப் பாழடைந்து, அழிவுற்றது. தாவீதுக்கு நம் தந்தையாகிய இறைவன் கொடுத்த வாக்குறுதி என்ன ஆனது? பாபிலோன் எருசலேமையும் அதன் ஆலயத்தையும் அழித்த போது கடவுள் எங்கே இருந்தார்? இருப்பினும், இந்த நாடுகடத்தல் நீடிக்காது. விரைவில் பாபிலோன் தோற்கடிக்கப்படும், கடவுளின் மக்கள் மீண்டும் திரும்பி வருவர், எருசலேம் மீட்கப்படும். தம் மக்கள் மீது கடவுளின் அன்பு இருந்தாலும் அவர்கள் ஒருபோதும் துன்பப்படமாட்டார்கள் என்று அர்த்தமில்லை, மாறாக, மறுசீரமைப்பும் மீட்பும் எப்போதும் அவரிடமிருந்து வரும்.

## இரண்டாம் வாசகம்:

### எபிரேயர் 1:1-6

எபிரேயருக்கு எழுதப்பட்டக் கடிதம் என்பது, இயேசுவின் அடையாளத்தின்படி ஒரு கிறிஸ்தவ சமூகம் உண்மையுள்ளதாக இருக்க எபிரேயர்களை ஊக்குவிப்பதற்காக எழுதப்பட்ட ஒரு மறையுரை. இதை எழுத்தாளர் எவ்வாறு செய்ய முயன்றார்? கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து வெளிப்பட்ட ஒன்றாக இதை அந்தத் திருச்சபை ஒருபோதும் பார்க்கவில்லை என்பதற்கு இப்பகுதி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. மாறாக, நம் தந்தையாகிய இறைவன், வரலாற்றில் எப்போதும் செயல்பட்டார், இயேசுவின் வருகை அந்த மீட்பு வரலாற்றின் உச்சக்கட்டம். இதனால் தான் நம் தந்தையாகிய இறைவன் தமது இறைவாக்கினர்கள் வழியாக எப்பொழுதும் பேசினார் என்பதை எழுத்தாளர் தன் சமூகத்திற்கு நினைவூட்டுகிறார். கடவுள் தம் மக்களை ஒருபோதும் கைவிடவில்லை. உண்மையில், நம் தந்தையாகிய இறைவன் இறுதியில் தம் சொந்த மகன் வழியாக நம்மோடு நேரடியாகப் பேசுகிறார். நாம் அடைய முடியாத இடத்திலிருந்து நம் மீது கொண்ட அன்பினால் கடவுள் நம்மோடிருக்க வந்திருக்கிறார். அப்படியானால், கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளம், எங்கோ இருக்கும் தெய்வ சக்தி அதிசயமாக நம்மிடம் வந்துள்ளது என்பது மட்டுமல்ல, மாறாக, கடவுளின் தெய்வீகத்தன்மையில் பங்கு கொள்ளும் திருமகனே நம்மோடிருக்க வந்திருக்கிறார். இதைவிட எத்தகையப் பெரிய வாக்குறுதியை நம் தந்தையாகிய இறைவன் நமக்களிக்க முடியும்?

## நற்செய்தி வாசகம்:
## யோவான் 1:1-18

யோவான் நற்செய்தியின் இந்த முன்னுரையே புதிய ஏற்பாட்டில் இயேசுவின் தெய்வீகத் தன்மை பற்றியத் தெளிவானப் பகுதிகளில் ஒன்றாகும். இறைவனே இறைவார்த்தை என்றும், அந்த வார்த்தையே இயேசு என்ற மனிதனாகி நம்மிடையே குடிகொண்டது என்றும் அது நம்பிக்கையுடன் அறிவித்தது. இரண்டாம் வாசகத்தில் உள்ளது போல, புதிய ஏற்பாட்டில் இயேசுவின் அடையாளம் பற்றியப் பல பகுதிகள் இருந்தாலும், இந்த முன்னுரையிலுள்ளது யோவான் நற்செய்தி முழுவதும் பயன்படுத்தப்படும், ஒளியும் இருளும் போல், தனித்துவமான உருவகங்களைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் இறைவார்த்தையாகிய இயேசு ஒளியாக இருக்கிறார். அவரது எதிரியான இருளால் அவரை வெல்ல முடியாது. ஆயினும், இயேசுவே உலகை மீட்க வந்த ஒளி என்று வெற்றி முழக்கமிட்டாலும், ஒரு ஆழமான இருள் இந்த உலகில் உள்ளது என அது ஏற்றுக்கொள்கிறது. அவர் மீட்க வந்த இவ்வுலகம் அவரையே ஏற்றுக்கொள்ளவில்லை. நம்பிக்கை தானாக வருவதில்லை என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். கடவுளே நம்மை மீட்கப் பாடுபட்டாலும், நாம் அவரையும் அவரது மீட்பையும் நிராகரிக்க முடியும். நம்மைச் சுற்றியுள்ளவர்களில் உள்ள கிறிஸ்துவை நாம் நம் கவனக்குறைவால் நிராகரித்துவிட்டோமோ, என்று நம்மை நாமே கேட்டு சிந்திக்க வேண்டியத் தருணம் இது.



# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

முதல் வாசகத்தில், நம் தந்தையாகிய இறைவன் தம் மக்களுக்கு உண்மையுள்ளவர் என்று எசாயா வழியாகக் கற்றுக் கொண்டோம். வீழ்ச்சியும் அழிவும் நம் வாழ்வையே சிதைத்தாலும், மறுசீரமைப்பை நாம் எதிர்நோக்க வேண்டும். இரண்டாம் வாசகத்தில், எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர் வழியாக நம் தந்தையாகிய இறைவன் வரலாற்றில் எப்போதும் செயல்பட்டார் என்று அறிந்து கொண்டோம். நமது நம்பிக்கையின் அடித்தளமான அவரது சொந்தத் திருமகனை அனுப்பி செயல்பட்ட விதத்தால் ஒரு முக்கிய நிகழ்வு நடந்தேறியது. நற்செய்தியில், உலகில் இருள் இருப்பதால், அதிலிருந்து நம்மை மீட்க நம் தந்தையாகிய இறைவன் தம் சொந்தத் திருமகனையே இவ்வுலகிற்கு அனுப்பினார் என்றும் வாசிக்கிறோம். இந்த இருள் இறைவார்த்தையை நிராகரிப்பதால் ஏற்படுவது மட்டுமல்ல, இவ்வுலகில் இறை ஆட்சி நிறுவப்படுவதை எதிர்க்கும் மனிதர்களின் பாவங்களாலும் ஏற்படுகிறது.

நற்செய்தியை அறிவிப்பதில் திருச்சபையின் பணி, ‘நமது உலகின் உருமாற்றத்தில் வெளிப்புற நிறைவைக்’ காண வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது உலக மறைபரப்பு நாளின் (2021) செய்தியில் குறிப்பிட்டார். திருத்தந்தை இன்று நம் உலகிலுள்ள இருளை அங்கீகரித்து, கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை வழியாக நம் உலகத்தை மாற்றியமைக்க வேண்டியக் கடவுளின் திருவுளத்தை அங்கீகரிக்கிறார். திருச்சபையாகிய நாம், திருச்சபையின் தலைவரான இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி, இருளால் வெல்ல முடியாத ஒரு பிரகாசிக்கும் ஒளியாக இருக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இப்போது, இந்த அழைப்பை ஏற்பது சவால் மிக்கதாக உள்ளது. முறிவுகளும் இருளும் நிறைந்த இவ்வுலகில் நாம் எவ்வாறு, எந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்? இது நமக்கு செலவுமிக்கதாக அமையும். வேறு வழியைப் பார்த்து இந்த அழைப்பை நிராகரிப்பது மிகவும் சுலபம். இருப்பினும், நம் தந்தையாகிய இறைவன் உண்மையுள்ளவர் என்பதையும், அவர் தம் சொந்த மகன் வழியாக நமக்காகச் செயல்பட்டிருக்கிறார் என்பதையும் இன்றைய வாசகங்கள் வழியாக நாம் கற்றுக்கொள்கிறோம். எனவே, விரக்தியடையாமல், சோதனையை நாம் எதிர்த்து, எதிர்நோக்குடன் திரும்ப வேண்டும். பல நூறு ஆண்டுகளாக கிறிஸ்து பிறப்பை ஒவ்வொரு ஆண்டும் திருச்சபைக் கொண்டாடுவதற்கு ஒரு காரணம் உள்ளது. இயேசு நம்மோடிருக்க வந்துள்ளார், இவ்வுலகில் அவருடைய ஒளியை எந்த இருளாலும் வெல்ல முடியாது என்பதே நம் கிறிஸ்து பிறப்பு வழிபாட்டு முறையின் நிலையான ஒரு நினைவூட்டல். நீங்கள் இந்த அழைப்பை ஏற்று இவ்வுலகிற்கு ஒளியாக இருப்பீர்காளா என்பதே இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கான நமது கேள்வியாக இருக்க வேண்டும்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- நம் தந்தையாகிய இறைவனுடைய மீட்பை நான் யாருடைய வாழ்வில் அனுபவித்தேன்?
- கடவுளின் வாக்குறுதிப்படி, அனைவருக்கும் மீட்பு என விவிலியம் கூறுகிறது. என் வாழ்வை மாற்றிய இந்த மீட்பை நான் பெற்றுள்ளேனா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நம் சமூகத்தில் கடினமானக் காலக்கட்டத்தில் கடவுளின் ஆறுதலை அனுபவித்தத் தருணங்கள் உண்டா எனப் பகிருங்கள்.
- நம் தந்தையால் வாக்களிக்கப்பட்ட எனது மீட்பை நான் கண்டடைந்தேனா? அதை என் வாழ்வில் ஏற்படுத்தியது யார்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- உங்கள் ஆலயப் பணிக்குழு உறுப்பினர் ஒருவரின் வாழ்வில் நடந்த ஒரு மீட்புத் தருணத்தை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?
- நமது அனைத்து உறுப்பினர்களின் மீட்புக்கான நம் தந்தையாகிய இறைவனின் திட்டத்துடன் ஒத்துழைக்க நமது ஆலயப் பணிக்குழுக்கள் செயல்படுகின்றனவா?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- இறைவன் மீது நம்பிக்கை வைத்த ஒரு குடும்ப உறுப்பினர் மனமாற்றம் அடைந்ததை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?
- இயேசு வழியாகவும், தூய ஆவியார் வழியாகவும் உங்கள் குடும்ப வாழ்வில் நம் தந்தையின் மீட்பின் யதார்த்தம் என்ன? நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் மிகவும் அன்பாகவும், மகிழ்ச்சியாகவும், சமாதானமாகவும் இருக்கிறீர்களா?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

இந்த இருண்ட உலகிற்கு கிறிஸ்து ஒளியாக இருப்பதால், நம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு மத்தியிலும் எதிர்நோக்குடன் வாழ கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு நினைவூட்ட வேண்டும்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

நீங்கள் சமீபத்தில் பார்த்த ஒரு துன்புறும் நபரை உன்னிப்பாகக் கவனியுங்கள். அவரின் தேவைகளை அறிந்து கிறிஸ்து பிறப்பு விழாவின் மகிழ்ச்சியை அவருக்கு அளியுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வழியாக நீர் எங்களுக்குக் காட்டிய அன்பிற்கான எங்களது நன்றியை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. இறுதித் தண்டனையிலிருந்து எங்களை மீட்க, எங்கள் துன்பங்களைச் சுமந்த இயேசுவை அளிக்கும் அளவுக்கு நீர் இவ்வுலகை மிகவும் அன்பு செய்தீர். உமது பெருந்தன்மைக்கும் நிபந்தனையற்ற அன்புக்கும் நாங்கள் உமது அரசின் வாரிசுகளாக மாறிவிட்டோம். எங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் உமது மீட்பின் சாட்சியாக இருந்து, அவரைப் பின்பற்றும்படி உமது மீட்புக்கு சாட்சியாகிய இயேசு எங்களை அழைக்கிறார். இந்த கிறிஸ்து பிறப்பு விழா எங்கள் இதயங்களில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தரும் வாக்களிக்கப்பட்ட மீட்பாக அமைவதாக. ஆமென்.

**இயேசு,**
**நம் தந்தையின்**
**மீட்புக்கு சாட்சி**



# என் கிறிஸ்து பிறப்புக் காலச் சிந்தனைக் குறிப்புகள்

# இயேசு,
## நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி

### தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

எங்கள் தந்தையின்
சாட்சியாகிய இயேசுவே,

2023ம் ஆண்டில் நீரளித்த ஆசீர்களுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். கடந்த ஆண்டு முழுவதும் நீர் எங்களோடு நடந்து, தீமையிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் எங்களைப் பாதுகாத்ததற்கும் உமக்கு நன்றி. கன்னி மரியா வழியாகப் மீட்பர் பிறப்பார் என்ற உமது வாக்குறுதியை நீர் நிறைவேற்றியதால், நாங்கள் அவரை எங்கள் தாயாக உற்று நோக்க நாங்கள் எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருப்போமாக. உமது அன்புக்கு ஈடில்லை என்பதால் நாங்கள் மிகுந்த நம்பிக்கையோடும், அமைதியோடும், மகிழ்ச்சியோடும் 2024ம் ஆண்டுக்குள் நுழைவோமாக.

ஆமென்.



# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### எண்ணிக்கை 6:22-27

இன்றைய முதல் வாசகம், லேவிய குருக்கள் (ஆரோன் லேவி கோத்திரத்தின் தலைவர்) இஸ்ரயேல் மக்களுக்காக செபித்து ஆசீ வழங்கும் பாரம்பரிய முறையை நமக்குக் காட்டுகிறது. இந்த ஆசி முறை, மக்கள் உடன்படிக்கையைக் கடைப்பித்ததற்கான வெகுமதியாகவும், ஆபிரகாம் வழியாக எல்லா இனத்தாருக்கும் வாக்களிக்கப்பட்ட ஆசி ஒரு நாள் நிறைவேறும் என்பதற்கான உத்தரவாதமாகவும் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. ஒருவரது பெயரைப் பற்றிய யூதர்களின் புரிதல் ஒரு நபரின் முழு சாரத்தையும் குறிக்கிறது. இவ்வாறு, தனது பெயரை அழைப்பதற்காக இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு ஆசியாக அளிக்கப்பட்ட இறைவனுடைய வாக்குறுதி, இறுதியில் ஆண்டவராகிய இயேசு வழியாக நிறைவேறியது. இந்த ஆசி, புதிய ஆண்டைத் தொடங்கும் இன்று, நமக்கு மிகவும் பொருத்தமாக வழங்கப்படுகிறது.

## இரண்டாம் வாசகம்:

### கலாத்தியர் 4:4-7

'காலம் நிறைவேறியபோது' என்று தூய பவுல் கூறுவதன் பொருள் என்ன? இயேசு உலகிற்கு வந்தது மனித வரலாற்றில் உச்சக்கட்டமாகவும் முக்கியத் திருப்புமுனையாகவும் இருந்தது என்று பொருள். இயேசு, நம் தந்தையாகிய இறைவனின் உடன்படிக்கை வாக்குறுதிக்குச் சாட்சியாகவும் அதன் நிறைவேற்றமாகவும் இருந்தார். நாம் அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்பட்டு, நாம் கடவுளை 'அப்பா, தந்தையே' என்று அழைக்க முடிவதால் அவருக்கு மிக்க நன்றி. யூத சட்டத்தை நிலைநிறுத்துவதன் வழியாக தாங்கள் முற்றிலும் தமது சொந்த முயற்சியால் மீட்பை அடைய முடியும் என்று கலாத்தியாவில் வாழ்ந்தக் கிறிஸ்தவர்கள் நினைத்ததால், இதை தூய பவுல் தெளிவுபடுத்துவது முக்கியமானது. இயேசுவின் இறப்பாலும் உயிர்ப்பாலும் இலவசமாகப் பெற்ற மீட்பு என்பது கடவுளின் அருள் என்பதைத் தூய பவுல் வலியுறுத்த விரும்பினார். அதை நாம் நம் சொந்த தகுதியால் பெற்றுக் கொள்ள முடியாது.

இப்புத்தாண்டில், கிறிஸ்துவின் ஒளியின் முழுமையில் இறைவனின் பிள்ளைகளாக வாழ திருச்சபை நம்மை ஊக்குவிக்கிறது.

## நற்செய்தி வாசகம்: லூக்கா 2:16-21

வழிபாட்டு நாள்காட்டியில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதை நற்செய்தி வாசகம் துல்லியமாகக் காட்டுகிறது: இது இயேசு பிறந்த 8வது நாள். கிறிஸ்து பிறப்பு விழாவின் விடியற்காலைத் திருப்பலியின் நற்செய்தி வாசகம் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கும். நாம் இன்னும் கிறிஸ்து பிறப்பு விழாவில் தான் இருக்கிறோம் என்பதை நினைவூட்டுகிறது!

இப்பகுதியில் அன்னை மரியாவின் கீழ்ப்படிதலைக் காணலாம். நம் தந்தையாகிய இறைவன் கபிரியேல் தூதர் வழியாகக் கொடுத்தக் அறிவுரைகளைப் பின்பற்றி, தன் மகனுக்கு ‘இயேசு’ என்று பெயரிட்டார். மேலே குறிப்பிட்டுள்ளபடி, ஒரு பெயரைப் பற்றிய யூதர்களின் புரிதல் வெறுமனே ஒரு நபரைக் குறிக்கும் சொல் அல்ல. அது ஒரு நபரின் சாராம்சம். ‘மீட்கும் கடவுள்’ எனப் பொருள்படும் இயேசுவின் பெயர் அவருடைய பணியின் தெளிவான பிரதிபலிப்பாகும்;.



# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

நமது திருச்சபை, ஆண்டின் முதல் நாளை இறைவனின் தாய் மரியாவுக்கு அர்ப்பணிக்கிறது (கிரேக்க மொழியில் தியோட்டோகோஸ், அதாவது 'கடவுளைத் தாங்குபவர்'). கி. பி. 431ல் எபேசு சபையால் வரையறுக்கப்பட்ட அன்னை மரியாவுக்கான முதல் தலைப்பு இதுவாகும். மேலும் இது, இன்னும் நமக்கு ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. நாம் இன்னும் கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டத்தில் இருக்கும் வேளையில், இன்று நாம் அன்னை மரியா மீது கவனம் செலுத்துகிறோம்.

நற்செய்தியில், அன்னை மரியாவின் உள்ளார்ந்த வாழ்வைப் பற்றிய ஒரு பார்வையைப் பெறுகிறோம். லூக்காவின் நற்செய்தியில், அன்னை மரியா தன் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்த இரண்டு நிகழ்வுகள் உள்ளன: ஒன்று, இடையர்களின் வருகை, மற்றது இயேசுவை ஆலயத்தில் கண்டடைந்தது. இரண்டும் கிறிஸ்துவின் தெய்வீகம் பற்றியக் குறிப்புகள். தன் மகனைப் பற்றி அன்னை மரியா அனுபவிப்பதையும், கற்றுக்கொள்ளும் அனைத்தையும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. பதட்டப்படுவதற்குப் பதிலாக, அவர் தன் எண்ணங்களோடும் உணர்ச்சிகளோடும் அமர்ந்து நடப்பதை எல்லாம் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சிங்கப்பூரின் பாதசாரிகள் தான் உலகில் அதிவேகமாக நடப்பவர்கள் என்று 2007ம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஒரு கருத்தாய்வு குறிப்பிடுகிறது. 2021ம் ஆண்டில் நடந்த மற்றொரு ஆய்வில், உலகெங்கிலும் உள்ள 50 நகரங்களில் சிங்கப்பூர் அதிக வேலை செய்யும் மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. வேலையும் உற்பத்தித்திறனும் நம் நாட்டில் முக்கிய மதிப்புகளாகிவிட்டன. அவை நம் உள்ளார்ந்த வாழ்வில் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? அடுத்து நாம் செய்ய வேண்டிய வேலை எது என்பதில் நம் கவனத்தைச் செலுத்தி, நம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, நம் வாழ்வைக் கடத்திச் செல்வதில் நாம் மூழ்கி விடுகிறோமா?

'அமைதி கொண்டு, நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்;' என்று திருப்பாடல் 46:10 நம்மை ஊக்குவிக்கிறது. மேலும் கடவுள், சுழல் காற்றிலும், நிலநடுக்கத்திலும், தீயிலும் பேசவில்லை, மாறாக, ஒரு மெல்லியக் காற்றின் அமைதியில் பேசுகிறார் என்பதை நாம் விவிலியத்தில் காண்கிறோம் (1 அர 19:11-13). நமது அனுபவங்கள், உணர்வுகள், நம்மைச் சுற்றியுள்ள மக்கள் வழியாகவே கடவுள் நம்மோடு தொடர்ந்து பேசுகிறார். நம் உள்ளத்தையும் மனதையும் அமைதிப்படுத்தி, நம் அன்றாட வாழ்வில் கடவுளின் சாந்தமான பிரசன்னத்தை உணர சிறிது நேரத்தை ஒதுக்கப் புத்தாண்டுத் தீர்மானம் எடுத்து, அன்னை மரியாவைப் போல், இவற்றையெல்லாம் நம் உள்ளத்தில் இருத்திச் சிந்திப்போம்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- அமைதியாக இருப்பது நமக்கு முக்கியமா?
- நாம் அமைதியாக சிந்திக்க நேரத்தை ஒதுக்காவிட்டால், நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதியில் வாழ முடியுமா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நமது பகிர்வில், பரிந்துரைகளையும் விளக்கங்களையும் விரைவாகச் செல்கிறோமா அல்லது மற்றவர்களும் சொல்ல வாய்ப்பளிக்கிறோமா?
- நம் தந்தையின் வாக்குறுதியைப் புரிந்து கொள்ள நம் சமூகத்தில் அமைதியாகக் காத்திருக்கும் பழக்கத்தை எவ்வாறு வளர்க்க முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- நமது பணிகளுக்கு மத்தியில் உள்ளத்தையும் மனதையும் திடமாக வைத்திருக்க ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் நேரத்தை ஒதுக்குகிறோமா?
- நமது ஆலயப் பணிக்குழுவிற்கு நம் தந்தையாகிய இறைவன் கொடுத்த வாக்குறுதி என்ன?

## குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- வீட்டைச் சார்ந்துள்ள சமையல், சலவை, துப்புரவு போன்றப் பல வேலைகளுக்கு மத்தியில் நம் இதயத்தையும் மனதையும் அமைதியாக வைத்திருக்க முடியுமா?
- நம் குடும்பத்தில் கடவுள் எவ்வாறு உறைகிறார் என்பதைச் சிந்திப்பதற்கு நாம் எவ்வாறு நேரம் ஒதுக்கலாம்?

# நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நம் தந்தை, இயேசு மற்றும் தூய ஆவியாருக்காக நாம் ஒதுக்கும் நேரமெல்லாம், நாம் அவர்களோடு இருந்து உறவாடுவதற்கான நேரமே.

# நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

இந்த வாரம் மற்றவருடன் நாம் தொடர்பு கொள்வதில், குழப்பத்தோடு இருப்பவர்கள் மீது சிறிது கவனம் செலுத்தி, அவருக்கு உதவ முற்படுங்கள். நாம் அவருக்காக இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த எளிய பரிசுகளை வழங்கி, அவருக்குச் செவிகொடுங்கள்.


## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே,

எங்கள் தூய அன்னை மரியாவைக் கொடையாகப் பெற்றதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவரை அம்மா என்று அழைப்பது எவ்வளவு பாக்கியம்! மீட்புக்கான உமது திட்டத்தை அவர் முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும், உமது அழைப்பிற்குப் பணிவாகக் கீழ்ப்படிந்து, உமது வாக்குறுதியின் சாட்சியை அவர் வெளிப்படுத்தினார். நாங்கள் ஒரு புதிய ஆண்டை நோக்கிச் செல்லும் போது, உமது அன்பிலும் அக்கறையிலும் நாங்கள் நம்பிக்கையோடு இருக்கிறோம். எனவே எங்களுக்கான உமது அழைப்பிற்கு நாங்கள் கீழ்ப்படிவதில் நம்பிக்கையோடு இருப்போமாக. எங்கள் வாழ்வு எப்போதும் உம்மையே மகிமைப்படுத்துவதாக.

ஆமென்.



**இயேசு,**
**நம் தந்தையின் வாக்குறுதிக்கு சாட்சி**

# என் கிறிஸ்து பிறப்புக் காலச் சிந்தனைக் குறிப்புகள்

# இயேசு,
## நம் தந்தையின் அறிவிப்புக்கு சாட்சி

### தொடக்க செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

**எங்கள் தந்தையின் சாட்சியாகிய இயேசுவே,**

**உமது ஒளி எங்கள் இருளைப் பிரகாசமாக்கி, எங்களது இதயங்களை உமக்கு வெளிப்படுத்தி, நாங்கள் உம்மை ஆராதிக்க ஈர்க்கப்பட்டு, உம்மை வணங்க உம் முன் கூடி வந்துள்ளோம். ஞானிகளை விண்மீன் வழிநடத்தியது போல், தூய ஆவியார் எங்களது இருண்ட காலத்திலிருந்து எங்களை உமது வாக்குறுதியின் அறிவிப்பாக மனுவுருவான உமது திருமகன் இயேசுவை, எங்கள் வாழ்வில் எல்லா இடங்களிலும் காண வழிநடத்துவாராக. நீரே எங்கள் ஒரே ஒளி, நீரே எங்கள் மகிழ்ச்சியின் ஆதாரம்.**

**ஆமென்.**



# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் கருத்துரைகளையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

# கருத்துரைகள்:

## முதல் வாசகம்:

### எசாயா 60:1-6

இறைவாக்கினர் எசாயா இஸ்ரயேலர்களை ‘எழுந்து, ஒளி வீசு’ என அறிவுறுத்துவது ஒரு ஆர்வத்தைத் தூண்டுகிறது, ஏனெனில் அங்கு நிலைமை சாதகமானதாக இல்லை. இது பாபிலோனிய நாடுகடத்தலுக்குப் பிந்தையக் காலகட்டமாதலால், இஸ்ரயேலர் தங்களைச் சுற்றியுள்ள சக்திகளுடன் ஒப்பிடுகையில் முக்கியமற்றவர்களாக உணர்ந்தனர். மக்களும் ஒருவரோடொருவர் சகஜமாகப் பழகவில்லை. விரக்தியோடு வீழ்ந்து கிடந்த அவர்களை ‘எழுந்து, ஒளி வீசு’ என இறைவாக்கினர் ஊக்குவிப்பதைக் கேட்பது விசித்திரமாக இருந்திருக்க வேண்டும்! ஆயினும், நம் தந்தையாகிய இறைவன் மீட்பை வாக்களித்திருப்பதால், கடவுளின் மாட்சி எழும், அவர்கள் அனுபவித்த இருளினின்றும் அடக்குமுறையிலிருந்தும் விடுதலை பெற்று, அனைவரும் காணும்படி எல்லா இனத்தாரும் கடவுளின் ஒளியை நாடுவர், என்பதையே இறைவாக்கினர் மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறார்.

## இரண்டாம் வாசகம்:

### எபேசியர் 3:2-3; 5-6

நம் தந்தையாகிய இறைவனின் மீட்புத் திட்டத்தை அறிவிக்கும் அருள் பணி தூய பவுலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் யூதர்களுக்கு மட்டுமல்ல, பிற இனத்தாரையும் உள்ளடக்கியது. தூய பவுலே இந்த மறைபொருளின் பணியாளர், பிற இனத்தாருக்கு நற்செய்தியை அறிவிப்பது இவரது கடமை, அவர்களும் அதே மெசியாவின் பரம்பரைக்கு வாரிசுகள்! இதற்காகத் தூய பவுல் சிறையில் அடைக்கப்பட்டு, பிற இனத்தாரின் திருத்தூதர் எனப் பெயர் பெறும் அளவுக்கு அவர் நற்செய்தியை அறிவிக்க மிகவும் துன்புற்றார்.

## நற்செய்தி வாசகம்:
## மத்தேயு 2:1-12

தாவீது அரசராகத் திருப்பொழிவு செய்யப்பட்ட இடத்தில் தான் உண்மையான 'யூதர்களின் அரசரான' இயேசு பிறந்தது தாவீது வம்சத்தின் அடையாளத்தைக் குறிக்கிறது. குழந்தை இயேசுவைக் கண்ட ஞானிகள் அரசர்கள் அல்ல, விண்மீன்களின் இயக்கங்களை ஆராயும் அறிஞர்களாக இருக்கலாம். யூதர்களின் அரசன் எனக் கூறிக் கொண்ட ஏரோதை விட, இயேசுவுக்கு சிறப்பாக பதிலளித்த பிற இனத்தாரை அவர்கள் பிரதிநிதிப்படுத்தினர். இது பிற இனத்தாரை இயேசுவின் பணியில் சேர்த்துக் கொள்வதற்கும், யூதர்களால் இயேசு நிராகரிக்கப்படுவதற்கும் ஒரு முன்னடையாளமாக இருந்தது.

# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

பெரும்பாலான மக்களுக்கு திருக்காட்சி என்றவுடன் ஞானிகளும், ஒட்டகங்களும், பரிசுகளும் நினைவுக்கு வரும். மற்றவர்களுக்கோ இது கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டத்தின் நிறைவைக் குறிக்கிறது. கிழக்கிலிருந்து வந்த ஞானிகளுக்கு குழந்தை இயேசு வெளிப்படுத்தப்பட்டக் கொண்டாட்டத்தைத் தவிர, இந்தக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் என்ன?

திருக்காட்சி என்பது நம் தந்தையாகிய இறைவனுடைய மீட்பின் மறைபொருளின் வெளிப்பாடு. இந்தக் கொண்டாட்டத்தைப் பற்றியத் தெளிவானப் புரிதலைப் நாம் பெற, முதலில் இறைவனின் மறைபொருள் என்ன என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கடவுள் படைப்பாளர், எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், முழுதும் ஆவியானவர். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் நம்மிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர். எனவே, நம் தந்தையாகிய இறைவனின் யதார்த்தத்தை நம்மால் முழுமையாகப் புரிந்து கொள்ளவோ அனுபவிக்கவோ முடியாது. எனவே, அந்த மறைபொருளைப் புரிந்து கொள்ள நமது சொந்த வழிகளில் முடியாது. ஆனாலும், நம் தந்தையாகிய இறைவன் தம்மை நமக்குப் படிப்படியாக வெளிப்படுத்தமாட்டார் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது.

மனிதகுலத்திற்கான நம் தந்தையின் மீட்புத் திட்டமானது, இறைவாக்கினர்கள், குறிப்பிட்ட நபர்களின் தியான அனுபவங்கள், தனித்துவ நிகழ்வுகள், தெய்வீகப் பிரசன்னத்தின் மாய உணர்வுகள் ஆகியவற்றால் காலகாலமாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இவை பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறுதியில், மனித குலத்திற்கான நமது தந்தையின் மீட்புத் திட்டத்தின் மறைபொருள் இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தப்பட்டு முழுமையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருக்காட்சித் திருவிழாவின் முக்கிய அம்சம் இதுவே: மூவொரு இறைவனின் மறைபொருள், நம் தந்தையாகிய இறைவனால் வெளிப்படுத்தப்பட்டு, திரு மகனாகிய இறைவனை நடுவராகக் கொண்டு, தூய ஆவியார் வழியாகத் தெரிவிக்கப் படுகிறது. நம் தந்தையாகிய இறைவனின் செய்திக்குச் சாட்சியான இயேசு கிறிஸ்து வழியாக, நம் தந்தையாகிய இறைவனின் யதார்த்தத்தையும் அவரது மீட்புத் திட்டத்தையும் நாம் அனுபவிக்க நெருங்கி வர முடியும்.

குழந்தை இயேசுவை வணங்க விண்மீனைப் பின்தொடர்ந்து கிழக்கிலிருந்து வந்த ஞானிகள், நம் தந்தையாகிய இறைவனின் மீட்புத் திட்டம் உண்மையில் முழு மனிதகுலத்திற்கும், முதலில் யூதர்களுக்கும், பின்னர் அனைத்து மனிதகுலத்திற்கும் நீட்டிக்கப்பட்டது என்பதைக் காட்டினர். எனவே, நாம் அனைவரும் நமது தந்தையின் மீட்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அவர் முன்னிலையில் நாமும் ஒரு இடத்தைப் பெறுவோம் என்பதே இதன் பொருள். இயேசு கிறிஸ்து நம் தந்தையின் திட்டத்திற்கு சாட்சியாக மாறியதால் இது சாத்தியமானது. அவர் குழந்தையாகப் பிறந்ததிலும், திருக்காட்சி வழியாகவும் வெளிப்படுத்தப்பட்டார். திருக்காட்சியை ஆண்டவரின் திருமுழுக்குடன் இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும். அங்கு நம் தந்தையாகிய இறைவன் அவரை, 'என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' என்று வெளிப்படுத்தினார் (மத் 3:17). இயேசு கிறிஸ்துவுக்குச் செவிகொடுத்துப் பின்பற்றுகிற அனைவரும் நிலைவாழ்வைப் பெறுவார்கள் என்பதையே இந்த வெளிப்பாடு நமக்குக் கற்பிக்கிறது. நம் தந்தையாகிய இறைவனின் திட்டத்தை இயேசு நமக்கு வெளிப்படுத்தியது போல, கிறிஸ்துவின் உடலாகிய நாமும் நம் தந்தையாகிய இறைவனைப் பற்றிய அறிவில் முன்னேறி சிறந்த சாட்சிகளாக மாறலாம். இதன் வழியாக, மற்றவர்களும் நம் தந்தையின் மீட்புத் திட்டத்திலும், கடவுளின் இதயத்திலும் இடம் பெற்றுள்ளார்கள் என்பதை உணர்த்தி அவர்களை ஈர்க்கலாம்.

# பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தைப் பகிரலாம்?*

- இயேசுவை என் அரசராக நான் உண்மையாக ஏற்றுக்கொள்வதன் பொருள் என்ன?
- நம் தந்தையாகிய இறைவன் அவரது வாக்குறுதியைப் பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள விரும்புகிறார் என்பதை உணரும் போது எத்தகைய உணர்வுகள் என்னுள் எழுகின்றன?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- திருக்காட்சி என்பது நம் தந்தையின் அன்பை அகில உலகிற்கும் அறிவிப்பதாகும். நம் சமூகம் எந்த வழிகளில் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு இதை அறிவிக்கிறது?
- ஒரு சமூகமாக அனைவரிடமும் தந்தையின் அன்பைக் காண நாம் எவ்வாறு இயேசுவைப் போல் மாறலாம்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*ஒரு ஆலயப் பணிக்குழுவாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- எனது பணிக்குழுவில் செயலாற்றுவது, நம் தந்தையின் மீட்புத் திட்டம் அகில உலகிற்குமுரியது என்பதை அறிவிப்பதற்கு எனக்கு உதவுகிறதா?
- ஒரு ஆலயப் பணிக்குழுவாகச் சென்று சிங்கப்பூரில் உள்ள அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்பது என் பணிக்குழுத் திட்டத்தின் ஒரு பகுதியா?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். ஒரு குடும்பமாக நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

- இயேசுவே வாக்களிக்கப்பட்ட மெசியா என எனது குடும்ப உறுப்பினர்களுக்கு நான் அறிவிக்க வேண்டுமா?
- நம் தந்தையின் அறிவிப்புக்குச் சிறந்த சாட்சிகளாக மாற நாம் குடும்பமாக இன்னும் என்ன செய்ய வேண்டும்?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நான் இயேசு கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றேன், அவர் வழியாகவே இறைவனின் மீட்புத் திட்டத்தில் எனக்கு ஒரு இடம் இருக்கிறது என்பதை உணர இதுவே ஆரம்பம். நான் இந்த உறவில் வளர்ந்து, இதைப் பற்றி பிறருக்குச் சொல்ல வேண்டும். ஏனென்றால், நம் தந்தை, இயேசு மற்றும் தூய ஆவியாரை அன்பு நான் செய்கிறேன்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

நமக்கான கடவுளின் மீட்புத் திட்டத்திற்கு இயேசு சாட்சியாக இருந்தது போல, இந்த வாரம், திருவருகைக்காலத்தின் தொடக்கத்திலிருந்து உங்களோடு பயணம் செய்தவர்களை உங்களுக்கு வசதியான ஒரு இடத்திற்கு (ஆலயம், உங்கள் வீடு, உணவகம்...) அழைத்து, உங்கள் 'நற்செய்தி' அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இயேசு உண்மையிலேயே நம் தந்தையின் வாக்குறுதி.



# இயேசு, நம் தந்தையின் அறிவிப்புக்கு சாட்சி

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே,

தூய ஆவியாரால் தூண்டப்பட்டு
எல்லாவற்றையும் நிறைவாகச் செய்த
உமது வாக்குறுதியின் சாட்சியாகிய
இயேசுவே உமது நீதிக்கு உண்மையான
சாட்சி. உடைந்த போன எங்கள்
உலகில் வாழும் மனுவுருவின்
முன்மாதிரிக்கு நாங்கள் எப்போதும்
நன்றியுள்ளவர்களாக இருப்போமாக.
உமது மீட்பின் செய்திக்கு சான்று பகரவும்,
நிலைவாழ்வை நோக்கியப் பயணத்தில்
மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்கவும்
நீர் எங்களை அழைத்திருக்கிறீர்.
இயேசுவின் மிகவும் விலைமதிப்பற்றப்
பெயரால் நாங்கள் உம்மைப்
போற்றிப் புகழ்கிறோம்.

ஆமென்.

# என் கிறிஸ்து பிறப்புக் காலச் சிந்தனைக் குறிப்புகள்



# நாங்கள் எதை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்?

இந்தக் கையேட்டைப் பயன்படுத்தியமைக்கு நன்றி! நீங்களும் உங்கள் சமூகமும் இறை நம்பிக்கையில் வளர இந்தச் சிந்தனைகள் உதவியிருக்கும் என நம்புகிறோம். இந்தக் கையேடு உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ததா? எதிர்காலக் கையேடுகளில் வேறு என்னென்ன எதிர்பார்க்கிறீர்கள்? உங்கள் கருத்து எங்களுக்கு முக்கியமானது. அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்!

Scan me

**one.org.sg/feedback**

# பிறர்சேர்க்கை

## திருவருகைக் கால, கிறிஸ்து பிறப்புக் கால நடவடிக்கைகள்

திருவருகைக்காலம் என்பது இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருந்து தயாரிக்கும் நேரம். இது சில வேளைகளில் நமது கிறிஸ்து பிறப்பு விழாவின் விருந்துகள், கேளிக்கைகள், பொருளீட்டல், விடுமுறை போன்ற உலகியல் நாட்டங்களின் தயாரிப்புக்களுள் தொலைந்து போகின்றது.

திருவருகைக் காலத்தின் முதல் நாள் நமது திரு அவையின் புதிய வழிபாட்டு நாள்காட்டியின் தொடக்க நாளாகும். மேலும், இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்காக நான்கு வார காலத் தயாரிப்பை நாம் தொடங்குகிறோம். திருவருகைக்காலம் என்பது இன்றைய உலகில் கிறிஸ்து பிறப்பிற்கு நம் உள்ளங்களையும் இல்லங்களையும் எவ்வாறு தயாரிப்பது என்பதைப் பற்றிச் சிந்திக்க உதவுகிறது. இயேசு பிறப்பின் உண்மையான பொருள் என்ன என்பதை நமது விசுவாசச் சமூகங்களும் குடும்பங்களும் செபத்தாலும், தியானத்தாலும், இசையாலும், நற்செயல்களாலும் நினைவில் கொள்ள வேண்டியக் காலம். இயேசுவின் வெற்றிகரமான இரண்டாம் வருகையைப் பற்றிச் சிந்திக்க வேண்டியக் காலம் இது.

நம் தந்தையாகிய இறைவனின் அற்புதக் கொடையான இயேசுவைப் பெற நமது குடும்பமும், நமது சமூகமும் நமது ஆலயப் பணிக்குழுக்களும் எப்படித் தயாராகலாம் என்பதைச் சிந்தித்துப் பார்த்து, தினமும் நம் தந்தையின் வார்த்தையை வாழ்ந்து, பிறருடன் பகிர வேண்டும். அவ்வாறு செய்வதால், நம் உண்மையான மீட்பரும், விசுவாசியும், சாட்சியுமாகிய இயேசுவை நாம் மாட்சிப்படுத்துகிறோம்.

ஒரு குடும்பமாகவோ, சமூகமாகவோ, ஆலயப் பணிக்குழுவாகவோ நீங்கள் செய்யக் கூடிய சில பரிந்துரைகள்:

- ஒரு தியானத்திற்காக நீங்கள் ஒன்றாகக் கூடி வர ஒரு நாளைத் தேர்வு செய்யுங்கள். நீங்கள் பின்வரும் இணைய தளங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.
- http://www.ignatianspirituality.com/advent
- https://onlineministries.creighton.edu/CollaborativeMinistry/online.html
- நீங்கள் திருவருகைக்கால நோன்பு (ஒருசந்தி) இருக்க முடிவு செய்யுங்கள். அதிகமாகப் பேசுவதைத் தவிர்த்து செவிகொடுப்பதில் கவனம் செலுத்துங்கள். முதலில், நமது செப நேரத்திலும், தினசரி விவிலியச் சிந்தனையிலும் நம் தந்தையாகிய இறைவனுக்குச் செவிசாய்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். பின்னர், உங்களைச் சுற்றியுள்ளக் குடும்பத்தார், சமூகத்தார், சக ஊழியர்கள், அக்கம் பக்கத்தார் அனைவருக்கும் செவிசாய்க்க முயலுங்கள். பிறரின் தேவைகளைக் கண்டறிந்து, அவர்களை செபத்திற்கு அழைத்து, அதற்காக நம் தந்தையாகிய இறைவனிடம் இணைந்து மன்றாடி அவற்றை நிறைவேற்ற முயற்சி எடுங்கள்.

- நீங்கள் பிறருக்கு எவ்வாறு ஒரு கொடையாக இருக்க முடியும் என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்கள் அருகிலுள்ள வறியோரைச் சென்றடையவோ, நோயுற்றோரைச் சந்திக்கவோ, தனித்திருக்கும் முதியோரையும் வெளிநாட்டுப் பணியாளர்களையும் சந்தித்துப் பேசவோ முயற்சி எடுக்கலாம். இதை நீங்கள் உங்களது அன்பியங்களோடும் ஆலயப் பணிக் குழுவோடும் இணைந்தும் செய்யலாம். மகிழ்ச்சியை நாம் பிறரோடுப் பகிரும் போது அது பெரிதும் அனுபவிக்கப்படுகிறது. பிறரைச் சென்றடைய இந்தத் திருவருகைக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவும் உங்களது சென்றடைதலில் அவருக்கு ஒரு சிறந்த சாட்சியாக இருக்கவும் மறவாதீர்கள்.

நீங்கள் ஒரு தனி நபராகவும் சாட்சி பகரலாம்:

- நீண்டக் காலமாகப் பேசாத ஒரு நண்பரை அழைத்து, நீங்கள் கேட்ட அல்லது பெற்ற
- தனியாக வசிக்கும் அண்டை வீட்டாரைச் சந்தியுங்கள்.
- உங்களுக்கு அருகிலுள்ளக் காப்பகத்தில் உள்ளவர்களுக்கு ஏதாவது கொண்டு செல்லுங்கள்.
- ஒவ்வொரு நாளும் செபம் தேவைப்படும் வெவ்வேறு நபருக்காக செபியுங்கள்.

## திருவருகைக் கால 'ஓ முன்மொழிப் பாடல்கள்'

பாரம்பரியமாக கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முன் உள்ள ஏழு நாட்களின் இரவு செபத்தின் போது (Vespers) பாடப்படும் சிறு பாடல்களை **'ஓ முன்மொழிப் பாடல்கள்'** எனக் கூறுவர். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளபடி வரவிருக்கும் மெசியாவின் பண்புகளைப் பாடலாகப் பாடி, வரவிருக்கும் கிறிஸ்து பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இக்கால மக்களுக்கும் விடுதலை கொடுக்க வல்லவர் என்பதை எடுத்துரைக்கும் அற்புதமான இறையியல் இதில் அடங்கியுள்ளது.

எசாயாவின் இறைவாக்கின்படி இயேசுவைத் தனிப்பட்டப் பண்புடன் அழைக்கும் 'ஓ' எனத் தொடங்கும் இப்பாடல்கள் அனைத்தும் மாலைப் பொழுதில் பாடப்படும்.

- டிசம்பர் 17 : ஓ சாபியென்சியா (ஓ ஞானமே) எசாயா 11:2-3
- டிசம்பர் 18 : ஓ அடோனாய் (ஓ ஆண்டவரே) எசாயா 11:2-3
- டிசம்பர் 19 : ஓ ராடிக்ஸ் ஜெஸ்சே (ஓ ஈசாயின் அடிமரத் தளிரே) எசாயா 11:1
- டிசம்பர் 20 : ஓ கிலாவிஸ் டேவிட் (ஓ தாவீதின் திறவுகோலே) எசாயா 22:22
- டிசம்பர் 21 : ஓ ஓரியென்ஸ் (ஓ விடி வெள்ளியே) எசாயா 9:2
- டிசம்பர் 22 : ஓ ரெக்ஸ் ஜென்டியும் (ஓ அனைத்துலக அரசரே) எசாயா 9:7
- டிசம்பர் 23 : ஓ இம்மானுவேல் (ஓ எங்களோடிருக்கும் கடவுளே) எசாயா 7:14

மாலையின் அந்திப் பொழுதில் '**ஓ முன்மொழிப் பாடல்கள்**' வழக்கமான முறையில் ஆன்மீக அலுவல்களுடன் பாடி, பின்னர் '**என் ஆன்மா ஆண்டவரை**' என்ற செபத்தைச் சொல்லி அதே '**ஓ முன்மொழிப் பாடல்கள்**' மீண்டும் பாட வேண்டும்.

**டிசம்பர் 17**

**ஓ ஞானமே!** உன்னதமான இறைவனின் படைப்புகள் அனைத்தையும் உமது ஆற்றலாலும் அன்பாலும் வழிநடத்துபவரே! ஞானத்தின் பாதையை எங்களுக்குக் கற்பிக்க வாரும்.

**டிசம்பர் 18**

**ஓ இஸ்ரயேல் வீட்டாரின் தலைவரே!** சீனாய் மலை மீது மோசேவுக்குக் கட்டளைகளைக் கொடுத்தவரே! உமது வல்லமையினால் எங்களை விடுவிக்க வாரும்.

**டிசம்பர் 19**

**ஓ ஈசாயின் அடிமரத் தளிரே!** உமது மக்கள் அனைவருக்கும் கடவுளின் அன்பின் அடையாளமாகத் திகழ்பவரே! எவ்விதத் தாமதமுமின்றி எங்களைக் காப்பாற்ற வாரும்.

**டிசம்பர் 20**

**ஓ தாவீது அரசரின் திறவுகோலே!** இறை அரசின் வாயில்களைத் திறப்பவரே! இருளின் ஆதிக்கத்தில் உள்ளோரை விடுவிக்க வாரும்.

**டிசம்பர் 21**

**ஓ விடி வெள்ளியே!** நிலையில்லாப் பேரின்ப ஒளியே! நீதியின் கதிரவனே! இருளில் வாழ்வோர் மீதும், இறப்பின் நிழலில் உள்ளோர் மீதும் பிரகாசிக்க வாரும்.

**டிசம்பர் 22**

**ஓ அனைத்துலக அரசரே!** திரு அவையின் மூலைக்கல்லே! நீர் மண்ணிலிருந்து உருவாக்கிய மனிதனை மீட்க வாரும்.

**டிசம்பர் 23**

**ஓ இம்மானுவேலனே!** எங்கள் அரசரே! கட்டளைகளைக் கொடுத்தவரே! எங்கள் ஆண்டவராகிய இறைவனே! எங்களை மீட்க வாரும்.



# திருவருகைக்கால மலர்வளையம்

*நீங்கள் ஒரு ஆலயப் பணிக்குழுவாகவோ, குடும்பமாகவோ, அன்பியச் சமூகமாகவோ, தனி நபராகவோ செபிக்க இக்கையேட்டைப் பயன்படுத்தும் போது, நீங்கள் முன்கூட்டியே ஒரு திருவருகைக்கால மலர் வளையத்தைத் தயாரிக்கலாம்.*

ஒளிக்கும் இருளுக்கும் இடையிலானப் பதற்றத்தில் உள்ளவர்கள், உலகின் ஒளியான மெசியாவின் வருகைக்காக காத்திருப்பதை இந்தத் திருவருகைக்கால மலர் வளையம் அடையாளப்படுத்துகிறது.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்த முதல் வருகையையும், வாழ்வோரையும் இறந்தோரையும் இறுதி நாளில் தீர்ப்பிடும் அவரது இரண்டாவது வருகையின் எதிர்பார்ப்பையும் ஒவ்வொரு வாரமும் நாம் ஏற்றி வைக்கும் இந்த மெழுகுவர்த்திகள் குறிக்கிறது. ஒவ்வொரு வாரமும் மெழுகுவர்த்தி ஏற்றப்படுவதால், உலகின் ஒளியான இயேசு கிறிஸ்து, உலகிற்கு வந்து இருளை வென்றார் என்பதையும், அதனால் ஒளி அதிகரித்து இருள் குறைகிறது என்பதையும் இது நினைவுபடுத்துகிறது.

# திருவருகைக் கால மலர் வளையத்துடன் செபித்தல்

*(Adapted from Catholic Household Blessings and Prayer, NCCB, 1988)*



# திருவருகைக்காலத்தின் முதல் வாரம்

*முதலில் திருச்சிலுவை அடையாளமிடவும்.*

முத: ஆண்டவரின் பெயராலே நமக்கு உதவி உண்டு.

எல்: ஏனெனில், விண்ணையும் மண்ணையும் படைத்தவர் அவரே.

## இறைவார்த்தை:
## இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 9 : 1 – 2

முத: காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்து உள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. ஆண்டவரே! அந்த இனத்தாரைப் பல்கிப் பெருகச் செய்தீர். அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தினீர். அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள். கொள்ளைப் பொருளைப் பங்கிடும் போது அக்களிப்பது போல் களிகூர்கிறார்கள்.

முத: ஆண்டவரின் அருள்வாக்கு.

எல்: இறைவனுக்கு நன்றி.

*சிறிது நேர மௌனத்திற்குப் பின், அனைவரும் பரிந்துரை செபங்களையும், கர்த்தர் கற்பித்த செபத்தையும் சொல்ல வேண்டும். அதன் பின்:*

முத: இந்தத் திருவருகைக்கால மலர்வளையத்தை ஆசீர்வதிக்கும்படி இப்போது நாம் நம் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

*அனைவரும் தங்கள் உள்ளங்கைகளை திருவருகைக்கால மலர்வளையத்தின் மேல் வைக்க, முதல்வர் கீழுள்ள செபத்தைச் சொல்கிறார்:*

முத: எங்கள் ஆண்டவராகிய இறைவனே, உம் திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். எங்கள் இம்மானுவேல் அவரே, மக்களின் எதிர்நோக்கு அவரே, எங்களைக் கற்பித்து வழிநடத்தும் ஞானமும் அவரே, ஒவ்வொரு நாட்டின் மீட்பரும் அவரே. ஆண்டவரே, இந்தத் திருவருகைக்கால மலர்வளையத்தின் மெழுகுவர்த்திகளை நாங்கள் ஏற்றும் போது உமது ஆசீரை எங்கள் மீது பொழிந்தருளும். இந்த மலர்வளையமும் அதன் ஒளியும் எங்களுக்கு மீட்பைக் கொண்டுவரும் கிறிஸ்துவின் வாக்குறுதியின் அடையாளமாக இருக்கட்டும். ஆண்டவரே, தாமதியாதேயும், சீக்கிரம் வாரும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

*முதல் ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்.*

முத : நாம் அனைவரும் ஆண்டவரைப் போற்றுவோம்.
எல் : இறைவனுக்கு நன்றி.

*கீழுள்ளப் பாடலைப் பாடி நிறைவு செய்யவும்:*

மாரனாதா மாரனாதா எம் ஆண்டவரே வருக
மண்ணகத்தோரை மீட்க மனுவேலா வருக

1. அகவிருளை அகற்றும் எழில் ஒளியே வருக
   இனிய விடிவெள்ளியே எழுந்தருளி வருக (மாரனாதா)

2. புனித ஈசாயின் வேல் பூத்த தாவீதின் மைந்தா
   புதுமை நிறை வாழ்வினைப் பொழிந்தருள வருக (மாரனாதா)

3. ஏக குரல் எழுப்பி இயங்கும் திருச்சபையின்
   அகில மனுமக்களின் அழைப்பினை உவந்தேற்க (மாரனாதா)

# திருவருகைக்காலத்தின் இரண்டாம் வாரம்

*முதலாம், இரண்டாம் ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும். அதன் பின் முதல்வர்:*

முத: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
எல்: ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

முத: ஆண்டவராகிய இயேசுவே வாரும்!
எல்: தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

முத: நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
எல்: ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

# திருவருகைக்காலத்தின் மூன்றாம் வாரம்

*முதலாம், இரண்டாம் ஊதா நிற மெழுகுவர்த்தியையும் இளஞ்சிவப்பு மெழுகு வர்த்தியையும் ஏற்றவும். அதன் பின் முதல்வர்:*

முத: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல்: ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

முத: ஆண்டவராகிய இயேசுவே வாரும்!

எல்: தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

முத: நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல்: ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

# திருவருகைக்காலத்தின் நான்காம் வாரம்

*முதலாம், இரண்டாம், மூன்றாம் ஊதா நிற மெழுகுவர்த்தியையும் இளஞ்சிவப்பு மெழுகு வர்த்தியையும் ஏற்றவும். அதன் பின் முதல்வர்:*

முத: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல்: ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

முத: ஆண்டவராகிய இயேசுவே வாரும்!

எல்: தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

முத: நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல்: ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

# கிறிஸ்து பிறப்பு விழா

முத : கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு நாம் கூடியுள்ளோம். *(அல்லது: இன்று, நாம் இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.)* அவருடைய வருகைக்காக நாம் நீண்டக் காலம் தயாராகி வருகிறோம். அவருடைய வருகையை முன்னறிவித்த

இறைவாக்கினர்களின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

வாசகர் 1 : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

வாசகர் 2 : ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ 'வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்' என்று அழைக்கப்படும்.

வாசகர் 3 : ஆனால் யூதா நாட்டுப் பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை; ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்.

முத : இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறியதை இன்று நாம் கொண்டாடுகிறோம். **இன்று தாவீதின் நகரத்தில் உங்களுக்கா மீட்பர் பிறந்துள்ளார். அவர் ஆண்டவராகிய மெசியா** என்று விவிலியம் கூறுகிறது. எனவே, திருவருகைக்கால மலர் வளையத்தின் அனைத்து மெழுகுவர்த்திகளையும் நாம் ஒவ்வொன்றாக ஏற்றி வைப்போம்.

முதலில், நாம் **நம்பிக்கையின் மெழுகுவர்த்தியை** ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நம் நம்பிக்கை. *(முதலாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்)*

இரண்டாவதாக, நாம் **அமைதியின் மெழுகுவர்த்தியை** ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நம் நம்பிக்கையும் அமைதியுமாவார். *(இரண்டாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்)*

மூன்றாவதாக, நாம் **மகிழ்ச்சியின் மெழுகுவர்த்தியை** ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறார். *(இளஞ்சிவப்பு நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்)*

நான்காவதாக, இயேசு நமக்கு அன்பு மயமானவராக இருப்பதால் **அன்பைப் பிரதிபலிக்கும் மெழுகுவர்த்தியை** ஏற்றி வைப்போம். *(மூன்றாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்)*




இறுதியாக, நாம் நடுவிலுள்ள மெழுகுவர்த்தியை ஏற்றுவோம். இது கிறிஸ்துவைக் குறிக்கும் மெழுகுவர்த்தி. இயேசு நமக்காகப் பிறந்தார் என்பதைக் கொண்டாட இதை நாம் ஏற்றுவோம். அவர் என்றென்றும் நம் வாழ்வில் நம் மத்தியில் நம்மோடு இருக்கிறார். (வெள்ளை நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்)

முத: அன்புத் தந்தையே, உமது திரு மகனாகிய இயேசு கிறிஸ்து என்னும் உன்னதமானக் கொடைக்காக உமக்கு நன்றி. அன்பானவரே, அனைவருக்கும் தந்தையே, இவ்வுலகை மூடிய இருள் உமது வார்த்தையின் பிரகாசமான விடியலுக்கு வழிவகுத்தது. எங்களை இந்த ஒளியின் மக்களாக மாற்றியருளும். காத்திருக்கும் இவ்வுலககிற்கு உமது வாழ்வைக் கொண்டு செல்ல, உமது வார்த்தைக்கு எங்களை உண்மை உள்ளவர்களாக மாற்றியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
எல்: ஆமென்.

# பொருளடக்கம்

## நன்றியறிவிப்புகள்


### ஆசிரியர் குழு

ஆக்னெஸ் ஙெள

ஆன்ட்ரு கில்ஃபி

டேஃப்னி லியோங்

எர்வின் சுசான்தோ

இசபெல் ஹோ

ஜாக்குலின் ஃப்ளெட்சர்

ஜெர்விஸ் காங்

சாரா வீ

அருட்தந்தை டெரென்ஸ் பெரெய்ரா

### மொழிபெயர்ப்பு

சீன மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் **(ACAMS)**

தமிழ் மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் **(ACTS)**

### வடிவமைப்பு

மேபெல் ஹியு

2 Highland Road #02-19 S(549102)

6911 0420

one.org.sg

enquiries.one@catholic.org.sg

@officeforthenewevangelisation

Office for the New Evangelisation

@evangelise.sg

OFFICE FOR THE NEW EVANGELISATION